பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை 08.12.2019 கதிர் 33

**இனி இது ரகசியம் அல்ல!**

பிரிட்டன் நீதிமன்றம் இலங்கையின் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துத் தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ள விவகாரம் இருநாட்டு உறவுகளில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என சில வட்டாரங்கள் பக்கம் 02



## வடக்கு - கிழக்கு பகுதிகளில் கொட்டித் தீர்க்கிறது மழை!

### வெள்ளத்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.08

வடக்கு கிழக்கில் கடந்த சில நாள்களாகக் கொட்டி வரும் கடும் மழையினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள் கடுமையான வெள்ளப் பாதிப்புகளைச் சந்தித்துள்ளன.

கிளிநொச்சி – இரணைமடுக் குளம் நிரம்பும் நிலையில் அதன் 14 வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் முத்தையன் கட்டுக்குளம் பக்கம் 03

# அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழருக்கு நல்லதொரு முடிவு!

## ஜெனிவாவில் அனுசரணையளித்த நாடுகளுடன் பேச்சுக்கள் ஆரம்பம் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 8

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு பொறுப்புக்கூறலை முன்னெடுக்கவேண்டும் என்ற பிரேரணையைத் தீர்மானமாக நிறைவேற்றிய நாடுகளுடன் நாம் இப்போதே பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம். இந்த நகர்வு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நல்லதொரு முடிவை கொண்டு வரும் என எதிர்பார்க்கின்றோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.எ. சுமந்திரன். பக்கம் 03



## 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ந்தும் அவசியம்!


### வலியுறுத்துகிறார் சிவஞானம்



யாழ்ப்பாணம், டிசெ. 8

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்கவேண்டும் என தென்னிலங்கையில் உள்ள தீவிரவாதப் போக்குடைய பக்கம் 03

## கொழும்பு துறைமுக நகர் நாட்டின் பகுதியாகியது!




கொழும்பு, டிசெ. 08

269 ஹெக்ரேயரில் கடலில் நிலப்பரப்பாக அமைக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம் நாட்டின் பகுதியாக பக்கம் 03

## அரசியல் கைதிகள் யாரும் விடுவிக்கப்படவேயில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 08

அண்மையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலரை ஜனாதிபதி விடுத்துள்ளார் எனச் செய்திகள் பரவியிருந்தன. என்னை பொறுத்தவரை அவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்பட்டதாக நான் பக்கம் 03

## கடத்தப்பட்ட சுவிஸ் தூதரக ஊழியரை அழைத்துச் செல்ல விமானம் தயாராம்

கடத்தப்பட்டு, அச்சுறுத்தி விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படும் சுவிட்சர்லாந்துத் தூதரகக் காரியாலய அதிகாரி பக்கம் 03

## யாழ். மாவட்டத்திலும் கடும் மழை ஆயிரத்து 874 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக 1,874 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து பக்கம் 03

## மல்கம் நேற்றும் சாட்சியம்

கொழும்பு, டிசெ. 08

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் பேராயர் கர்தினால் மல்கம் பக்கம் 03

## நான்கு வயதுச் சிறுவன் கிணற்றில் வீழ்ந்து சாவு!

### திருகோணமலையில் சோகம்

திருமலை, டிசெ. 08

திருகோணமலையில் 4 வயதுச் சிறுவன் கிணற்றில் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை பக்கம் 03

## இழப்பீட்டுக்கான அலுவலகம் எங்களுக்குத் தேவையில்லை!

### வவுனியாவில் உறவுகள் போராட்டம்



வவுனியா, டிசெ. 08

இழப்பீட்டுக்கான அலுவலகம் தமக்குத் தேவையில்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர். பக்கம் 03

## முதலிடத்தில் இலங்கை!

கொழும்பு, டிசெ.08

எதிர்வரும் குளிர்காலப் பருவத்தில் சுற்றுலாவுக்கான தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடுகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு.எஸ்.ஏ. டுடே (usato-day) என்ற பிரபல இணையத்தளம் பக்கம் 03

## முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தில்

முல்லைத்தீவு, டிசெ.08

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பெய்த கன மழை பக்கம் 02

# ஐ.தே.கவினால் வெற்றிப் பாதையில் ஒருபோதும் பயணிக்கவே முடியாது!

## அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில

கொழும்பு, டிசெ. 08

அடிப்படைவாதிகளும், பிரிவினைவாதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சூழ இருக்கும் வரை, அந்தக் கட்சியால் வெற்றிப் பாதையை நோக்கி ஒருபோதும் பயணிக்கவே முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

சஜித் பிரேமதாஸ, மிகவும் நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் தான் இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு கஷ்டப்பட்டுபெற்றுக் கொண்ட இந்தப் பதவியில் அவர் தொடரவேண்டும் என நாம் இவ் வேளையில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்று தலைமைத்துவப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பதவியையும் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்க வேண்டும் என அந்தக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் அனைவரும் கோரி வருகிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதில் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு வந்தால் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வார்களா எனும் கேள்வியும் எழுகிறது.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்குவதை விட சஜித் களமிறங்கினால் வெற்றி உறுதி என்றுதான் சஜித் பிரேமதாஸவை வேட்பாளராக அவர்கள் களமிறக்கினார்கள்.

பாரிய போராட்டத்தின் மத்தியிலேயே அவர் வேட்பாளராக களமிறக்கப்பட்டார். ஆனால், பிரதிபலன் எவ்வாறு அமைந்தது? ரணில் விக்கிரமசிங்கவை விட பாரியளவிலான தோல்வியையே அவர் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள விரோத தன்மை, சர்வதேசத்துக்கு அமைவாகச் செயற்படும் தன்மையை மாற்றிக் கொள்ளாவிட்டால் மற்றும் அடிப்படைவாதியான ரிஷாத் பதியுதீன், பிரிவினைவாதி எம்.ஏ.சுமந்திரன், பொய்களைக் கூறும் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன மற்றும் சர்வதேச சக்திகளின் அடிவருடியான மங்கள சமரவீர போன்றவர்களைச் சூழ வைத்துக் கொண்டால், இதே பெறுபேறுதான் சஜித் பிரேமதாஸவின் தலைமையின் கீழும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கும். இதுதொடர்பில் எவ்வித சந்தேகமும் இல்லை – என்றார். (ஐ)

# கிளிநொச்சி மக்கள் முகாம்களில் தஞ்சம்



கிளிநொச்சியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் மக்கள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் நேற்று நான்கு மணி வரை வெள்ளத்தினால் 8440 குடும்பங்களைச் சேர்ந்த 27'125 பேர் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

அத்துடன் மாவட்டம் பூராக 31 முகாம்களில் 2610 குடும்பங்களைச் சேர்ந்த 2,176 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மாணவிகளுடன் தவறாக நடந்தவர் கைதாகினார்!

மன்னார், டிசெ.08

மன்னார் – அடம்பன் பகுதியில் தனியார் வகுப்புக்குச் சென்று விட்டுத் திரும்பிய மாணவிகள் இருவருடன் தகாத முறையில் நடக்க முயன்ற வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

அடம்பன் பகுதியைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் இரு மாணவிகள் நேற்று முன்தினம் மாலை நேர வகுப்பு முடிவடைந்து வீடு சென்ற வேளையில், அந்தப் பகுதியில் நபரொருவர் தகாத விதமாக நடந்து கொண்டமையுடன் ஒரு மாணவியைத் தாக்கியும் கழுத்து மற்றும் கன்னத்தில் கடித்துக் குளத்தில் மூழ்கடிக்க முயன்றுமுள்ளார். மற்றைய மாணவி தப்பிச் சென்று கிராம மக்களின் உதவியுடன் சக மாணவியை மீட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் கிராம மக்களைப் பார்த்தவுடன் குளக்கி... னூடாகத் தப்பித்து... யில் அடம்பன் ... கைது செய்யப்... கிராம மக்கள்... பட்ட இரு மாணவி... பொது வைத்திய... சைகளுக்காக ... டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட நபர் நேற்றுக் காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

பாதிக்கப்பட்ட மாணவிகள் சார்பாக சட்டத்தரணிகளான டினேஷ் மற்றும் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

# முதலாவது பிரசவத்திலேயே 4 குழந்தைகள் பெற்ற தாய்

அலவதுகொட, விலான, உடகமவில் வசிக்கும் நலிந்த லக்ஸான் விஜேதுங்கவின் மனைவி தேவிகா உதயங்கனி ஜயசூரியவுக்கு தனது முதலாவது பிரசவத்திலேயே நான்கு பிள்ளைகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை போதனா வைத்தியசாலையில் இந்தக் குழந்தைகள் பிறந்துள்ளனர. தற்பொழுது




நான்குபிள்ளைகளும் அவர்களது வீட்டுக்குச் சென்றுள்ளன எனவும், போதிய ஆரோக்கியத்துடன் அவை காணப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

2018 இல் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்ற வேளை பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை அச்சுறுத்தும் விதத்தில் பிரிகேடியர் பெர்னாண்டோ சைகை செய்தார் என்பதுதான் அவருக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு.

இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அபராதத் தொகை இலங்கை பணத்தில் சுமார் ஐந்து அல்லது ஆறு லட்சம் ரூபாதான்.

ஆனால் அந்தத் தீர்ப்புக் கிளப்பி விட்டிருக்கும் ராஜதந்திர சர்ச்சை பெரும் ஆழமானது, மோசமான விளைவுகளைத் தரவல்லது என்கின்றன ராஜதந்திர விடயங்களில் பரிச்சயமான வட்டாரங்கள்.

இந்த வழக்குத் தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்ற ஒழுங்கு இது ஓர் அரசியல் ரீதியான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைப் புலப்படுத்துகின்றது – என இலங்கை வெளி விவகார அமைச்சு வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான சர்ச்சை ஆரம்பமானபோதே கொழும்பு இங்குள்ள பிரிட்டிஷ் தூதரை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து இலங்கை அரசின் நிலைப்பாட்டை பிரிட்டன் தரப்புக்குத் தெளிவாகத் தெரியப் படுத்தியிருந்தது.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மேற்படி சர்ச்சைக்குரிய சம்பவம் நடைபெற்றபோது பிரிட்டனில் இலங்கைக்குரிய இராஜதந்திரியாகவே பணியாற்றிக்கொண்டிருந்தார்.

அதனால் சட்ட வழக்குகள் தொடரப்படமுடியாத இராஜதந்திர சிறப்புரிமை – சட்ட விலக்களிப்பு அல்லது விடுபாட்டுஉரிமை – அவருக்கு இருந்தது. ஆகையினால் அச்சமயம் நடைபெற்ற சம்பவத்துக்காக அவருக்கு எதிராக பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எதனையும் முன்னெடுக்க முடியாது. அப்படி சட்ட நடவடிக்கை ஏதும் பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டால் அதைத் தடுத்து நிறுத்தி இராஜதந்திர சிறப்புரிமையை நிலைநாட்டுவது பிரிட்டனின் பொறுப்பு – கடமை – என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதருக்குத் தெரியப்படுத்தியிருந்தது. பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகமும் இதே விடயத்தை லண்டனில் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப் படுத்தியிருந்தது.

ஆனால், இந்த விடயங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு, இலங்கையின் இராஜதந்திரியாகப் பணியாற்றிய ஒருவருக்கு எதிராக – அவரது சிறப்புரிமையை நிராகரித்து – பிரிட்டிஷ் நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்ப்பளிப்பதற்கும் பிரிட்டிஷ் அரசு இடமளித்தமை மிக மோசமான தவறு எனக் கொழும்பு அரசுத் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

பிரிட்டனின் இந்த நடடிவக் கைக்கு எதிராக இலங்கை இராஜதந்திர ரீதியில் எதிர்வினையாற்றத் தயாராகி வருவதாக ஒரு தகவல் தெரிவித்தது.

பொதுத் தேர்தலுக்கு பிரிட்டன் தயாராகிக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தத் தீர்ப்பு வந்தமை, இந்த வழங்கு விசாரணை நடைபெற்ற சமயங்களில் எல்லாம் நீதிமன்றுக்கு வெளியே தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடியை தாங்கியவாறு அதன் ஆதரவாளர்கள் எப்போதும் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதித்தமை, அடாத்தான – அச்சுறுத்தும் விதத்தில் – அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் செயற்பட இடமளித்தமை, வழக்குத் தொடுநரினால் நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரகசிய விவரங்கள் பகிரங்கமானவை போன்றவை இந்த வழக்கும், விசாரணைகளும், தீர்ப்பும் அரசியல் உள்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதற்கு நல்ல ஆதாரங்கள் – சான்று – என்கின்றது கொழும்பு வெளிவிவகார அமைச்சு.

பிரிட்டனின் நீதிமன்றம் ஒன்று இலங்கை இராஜதந்திரி ஒருவருக்கு எதிராக இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதித்த பிரிட்டனுக்கு எதிராப் பதிலடி நடவடிக்கைக்குக் கொழும்பு தயாராகின்றதாம்.

ஒரு நாடு, பிற நாட்டின் இராஜதந்திரி ஒருவரை வெளியேற்றினால், அந்தப் பிறநாடு பதிலடி நடவடிக்கையாகத் தனது நாட்டில் உள்ள அந்த மற்றைய நாட்டின் அதேபோன்ற ஓர் இராஜதந்திரியை வெளியேற்றும். இதுதான் வழமை

அந்தப் பாணியில் இந்த விடயம் தொடர்பில் பிரிட்டனுக்கு எதிராக இலங்கை எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? பொறுத்திருந்து பார்ப்போமே!

- மின்னல் -

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாகக் கிராமங்கள் மற்றும் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. இதன் காரணமாகப் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பண்டாரவன்னியன் கிராமம், பேராறு, முத்தையன்கட்டு போன்ற கிராமங்களும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இருட்டுமடு, சுதந்திரபுரம், உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம், தேராவில், மூங்கிலாறு, மன்னாகண்டல் போன்ற கிராமங்களும் வெள்ளப்பெருக்கு காரணமாக பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த வெள்ள இடர் காரணமாக இந்தக் கிராமங்களில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான சமைத்த உணவுகள் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவு பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

மீட்புப் பணிகளில் இராணுவம், பொலிஸார் மற்றும் பிரதேச இளைஞர்கள் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# வெள்ளத்தால் சேதமுற்ற பொன்னாலைப் பாலம்!

## ஒரே இரவில் சீர்செய்தது இராணுவம்



யாழ்ப்பாணம், டிசெ. 08

பொன்னாலை பி 75 பிரதான வீதியில் சேதமடைந்த பாலம் ஒன்றை ஒரே இரவில் இராணுவத்தினர் சீர்ப்படுத்தியுள்ளனர்.

30 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்ட இந்தப் பாலம் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் உடைந்து போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து விரைவாக நடவடிக்கை எடுத்த அவர், ஒரே இரவில் இராணுவத்தை வைத்துப் பாலத்தைச் சரி செய்தார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளிட்ட பல குளங்களின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தினாலும், குளங்களின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையாலும், இரண்டு மாவட்டங்களிலும் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 225 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 344 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அவர்களில் ஆயிரத்து 877 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 90 பேர் இடம்பெயர்ந்து 25 தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் 9 ஆயிரத்து 297 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 19 ஆயிரத்து 831 குடும்பங்களைச் சேர்ந்த 64 ஆயிரத்து 448 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 2ஆயிரத்து 611 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 478 பேர் இடம்பெயர்ந்து 56 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 22 ஆயிரத்து 992 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 182 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 798 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 507 பேர் 17 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால், 15 ஆயிரத்து 19 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 434 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 144 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 27 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 826 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 271 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஜ)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

அத்துடன், கொழும்பு துறைமுக நகரில் முதலீடு செய்ய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது. (ஜ)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை – துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணவெளிப்பகுதியிலே இந்தச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுவனின் சடலம் திருகோணமலை பொது ஆதாரவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## அடுத்த ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜெனிவா விவகாரத்தில் நாம் ஏற்கனவே சில முன்னெடுப்புகளை கையாண்டுள்ளோம். இதில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் எமக்கு அனுசரணையாக இருக்கின்ற நாடுகளின் கூட்டமொன்று உள்ளது. இந்தக் குழுவுக்கு இப்போது தலைமை தாங்குவது பிரிட்டன். ஆகவே அவர்கள்தான் இப்போது இதற்கொரு வடிவம் கொடுக்கவேண்டும். அந்த வகையில் பிரிட்டன் தூதுவரை அண்மையில் சந்தித்து இந்த விடயம் குறித்து ஒன்றரை மணித்தியாலத்துக்கும் அதிகமாக பேசினோம். வருகின்ற சிலநாள்களில் மேலும் சிலருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆகவே எழுந்துள்ள புதிய சூழ்நிலை சம்பந்தமாக இப்போது பிரேரணையை நிறைவேற்றிய நாடுகளுடன் நாம் இப்போதே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். இது மார்ச் மாதத்தில் நல்லதொரு முடிவை கொண்டுவரும் என எதிர்பார்க்கிறோம். பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னைய அரசு தீர்மானங்களை எதிர்க்கவில்லை. சில ஆரோக்கியமான நகர்வுகளை அவர்கள் முன்னெடுத்தனர்.

பொறுப்புக்கூறல் விடயத்தைத் தவிர்த்து செயற்பட முடியாது. பொறுப்புக்கூறல் என்பது எல்லா அரசுகளுக்கும் இருக்கின்ற பொறுப்பாகும். அதனைத் தட்டிகழிக்கவே முடியாது. இந்தப் புதிய அரசு வடக்கு – கிழக்கில் எமது மக்களை அடையாளப்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செய்தால் அதனை நாம் ஆதரிப்போம். அதற்காக, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் நாம் கண்ணை மூடிச் செயற்படுவதாக அர்த்தமில்லை. இந்த விடயத்தில் எமதுஎதிர்ப்பையும்அழுத்தங்களையும் முழுமையாக நாம் பிரயோகிப்போம் – என்றார். (ஜ)

## மல்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஞ்சித் நேற்றும் வாக்கு மூலம் வழங்கினார்.

நேற்று அவர் மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்தார். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று முன் தினம் சுமார் 4 மணித்தியாலங்கள் வாக்கு மூலம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜீ. பிரான்ஸிஸ் உட்பட அவரது குடும்பத்தினரை அழைத்துச் செல்ல நோயாளர்களை அழைத்துச் செல்லும் சுவிஸ் நாட்டின் விசேட விமானமொன்று சூரிச் விமான நிலையத்தில் தயாராக இருப்பதாகத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

அந்த விமான நிலையத்தின் ஊடாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைய சுமார் பத்தரை மணி நேரம் தேவைப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடத்தப்பட்ட அதிகாரியைசுவிஸ்நாட்டுக்கு அனுப்புமாறு அந்நாட்டின் இராஜாங்கச் செயலாளர் மேரிஸ் கொழும்பு தூதரகத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இருப்பினும், மேற்படி சுவிஸ் விமானத்துக்கு இலங்கை விமான நிலையத்துக்குள் பிரவேசிக்க சிவில் விமான சேவை அதிகாரிகள் இதுவரையில் அனுமதி கொடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜீ. பிரான்சிஸ் என்ற அதிகாரிக்கு இந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு டிசம்பர் 9 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வர்கள் கூறி வருகின்றனர். எனினும்நாட்டின்நிர்வாகக்கட்டமைப்பை முன்னெடுக்க 13 ஆவது திருத்த சட்டமே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டும், அதனை ஒழிக்க வேண்டும் எனத் தென்னிலங்கையில் பரவலாக பேசப்பட்டு வருகின்றது. இது புதிதான விடயம் அல்ல. எனினும் தற்போது பொதுபல சேனாவின் தலைவர் ஞானசாதார தேரர் கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என தென்னிலங்கையில் உள்ள தீவிரவாதப் போக்குடையவர்கள் கூறிவருகின்றனர். அந்த வரிசையில் இவரும் இதனைக் கூறியுள்ளார்.

13 ஐ பொறுத்தவரை இந்த சட்டம் வந்த காலத்தில் இருந்தே தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யவில்லை என்று கூறி வருகின்றோம். அத்துடன் இந்த சட்டத்தை ஓர் ஆரம்பப் புள்ளியாக வைத்து பயணிக்க முடியும் என்றே நம்பி வருகின்றோம்.

இந்த சட்டம் இலங்கையின் அரசமைப்பின் ஓர் அங்கமாக இருந்தே இப்போதும் வருகின்றது. இதன் ஊடாக மாகாண சபை முறைமை உருவானது. இந்த முறைமை அதிகார பரவலாக்கம் என்ற விடயத்தின் அடிப்படையாக அமைகின்றது.

குறிப்பாக ஐ.நாவின் அதிகார பரவலாக்கம் என்பதில் மாகாண சபை முறைமையே கூறப்பட்டுள்ளது. எனவே நாட்டின் நிர்வாக கட்டமைப்பை முன்னெடுக்க 13 ஆவது திருத்த சட்டம் தொடர்ந்தும் இருக்கவேண்டும் – என்றார்.

## முதலிடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனைத் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளால் கவரப்பட்ட முதல் 20 நாடுகளில் இலங்கை முதலிடம் பிடித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் தளங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் இயற்கை அமைவிடங்கள் அனைத்தும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் விடயங்களாக உள்ளன என அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் குளிர்காலப் பருவத்தில் டிசெம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான காலங்களில் இலங்கை போன்ற நாடுகள் உடலுக்கு ஏற்ற சமநிலையை ஏற்படுத்தும் காலநிலையைக் கொண்டிருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலில், இலங்கைக்கு அடுத்து கலப்பாகோஸ் தீவு, டுபாய், வியட்நாம், ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. (ஜ)

# கடத்தப்பட்ட சுவிஸ் தூதரக ஊழியரை அழைத்துச் செல்ல விமானம் தயாராம்



கடத்தப்பட்டு, அச்சுறுத்தி விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படும் சுவிட்ஸர்லாந்துத் தூதரகக் காரியாலய அதிகாரி ஜீ. பிரான்ஸிஸ் உட்பட அவரது குடும்பத்தினரை அழைத்துச் செல்ல நோயாளர்களை அழைத்துச் செல்லும் சுவிஸ் நாட்டின் விசேட விமானமொன்று சூரிச் விமான நிலையத்தில் தயாராக இருப்பதாகத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

அந்த விமான நிலையத்தின் ஊடாகக் கிடைக்கப் பெற்ற தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைய சுமார் பத்தரை மணி நேரம் தேவைப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடத்தப்பட்ட அதிகாரியை சுவிஸ் நாட்டுக்கு அனுப்புமாறு அந்நாட்டின் இராஜாங்கச் செயலாளர் மேரிஸ் கொழும்பு தூதரகத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இருப்பினும், மேற்படி சுவிஸ் விமானத்துக்கு இலங்கை விமான நிலையத்துக்குள் பிரவேசிக்க சிவில் விமான சேவை அதிகாரிகள் இதுவரையில் அனுமதி கொடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜீ. பிரான்சிஸ் என்ற அதிகாரிக்கு இந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு டிசம்பர் 9 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இழப்பீட்டுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் அந்த உறவுகள் நேற்று வவுனியாவில் மேற்கொண்டனர்.

வவுனியாவில் 1022 ஆவது நாளாக பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று மாலை இந்த விடயத்தை வெளிக்கொணரும் வகையில் ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துகொண்டு 'இழப்பீட்டு அலுவலகம் எமது பிள்ளைகளை மீள ஒப்படைக்குமா?', 'எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும்' என்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியிருந்தமையுடன் கோசங்களையும் எழுப்பிப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஜ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறியவில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் வடக்குமாகாணஅவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது என்னத்தைக் காட்டுகின்றது என்றால் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்ற மாயையை உருவாக்கிநாட்டில்தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் இராணுவத்தினர் சிறையில் உள்ளனர் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கச் சில தென்னிலங்கை சக்திகள் முயல்கின்றனர்.

இதன் ஊடாக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இராணுவ வீரர்களை விடுதலை செய்யச் சதிகள் நடைபெறுகின்றனவா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. இது முழுக்க முழுக்க புலனாய்வுத் தகவலாளிகளின் திட்டமிட்ட செய்தியாகவே நான் பார்க்கின்றேன் – என்றார். (ஜ-08)

## யாழ். மாவட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
298 பேர் பாதிப்படைந்துள்ளனர் என யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாகத் தாழ்வான பிரதேசங்கள் மற்றும் குடிசைகளில் வாழும் குடும்பங்களே மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன. அதிலும் வடமராட்சி, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் அதிக பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

177 குடும்பங்கள் வீடுகளில் வசிக்க முடியாத நிலையில் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நாம் உலர் உணவுகள் வழங்கியும் வருகின்றோம். மழை தொடர்ச்சியாகப் பொய்யுமாக இருந்தால் பாதிப்புக்கள் இன்னும் அதிகரிக்கலாம். நாம் பாதிப்புக்களை – இடர்களை – எதிர் கொள்ளத் தயாராக உள்ளோம். அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி எம்முடன் தொடர்பு கொண்டிருந்தார். மக்களை மீட்பது, இடர் மீட்பு போன்ற வற்றுக்குத் தாங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

சில இடங்களில் அவர்கள் மீட்புப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் இடர் ஏற்படும் சூழ்நிலையில் உடனடியாக இராணுவத்தினரின் உதவியைக் கோருமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

மழையின் காரணமாகப் பல இடங்களில் கால்வாய்கள் நிரம்பியுள்ளன. இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகக் காணப்படும். எனவே மக்கள் டெங்குநோய்த்தாக்கம் தொடர்பிலும் விழிப்பாக இருக்கவேண்டும்.

அண்மைய மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள வெள்ள நீர் தடுப்பணைகள், கடல்நீர் தடுப்பணைகள் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன. அதிலும் அராலி, அரியாலை, தொண்டமானாறு அணைகள் பாதுகாப்பிற்காகத் திறக்கப்பட்டுள்ளன. எனவே மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் – என்றார். (ஜ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ‘என்கவுண்டர்’ நீதி?

இழைக்கப்படும் குற்றங்கள் குரூரமாக இருக்கின்றன என்பதற்காக நாட்டின் சட்ட திட்டங்களும், நீதி விசாரணை முறைகளும் குரூரமாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் மிகமோசமான இழிநிலைக்கு மனிதம் சென்று விட்டதா? அல்லது மனிதம் செத்து விட்டா? – என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

தெலுங்கானாவில் இடம்பெற்ற சம்பவங்களும் அவற்றுக்குப் பொதுமக்கள் தரப்பில் காட்டப்படும் எதிர்வினைகளும் இத்தகைய சிந்தனையைத்தான் எமக்குத் தந்து நிற்கின்றன.

ஓர் ஒழுங்கு முறையான சமுதாயத்தை ஏற்படுத்துகின்றோம் என்று நினைத்துக் கொண்டு காட்டேறித்தனமான போக்கில் அச்சுறுத்தல் தண்டனைகளை நிறைவேற்றுவதும் –

அந்தக் காட்டேறித்தனமான தண்டனை முறையை மெச்சி, வரவேற்று, அதன் மேல் ஒரு சமூக ஒழுங்கைக் கட்ட முனைவதும் விபரீதமான உலக வாழ்வியல் முறைமையை ஏற்படுத்தி விடும் ஆபத்து உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது.

குற்றவாளி எவ்வளவு தூரம் மிருகத்தனமாக நடந்து கொண்டாலும், தண்டனையும், தண்டிக்கும் முறையும் அதற்குப் போட்டியாக மிருகத்தனமாக – நாகரீகமற்ற முறையில் – அமையக் கூடாது.

குற்றங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே தண்டனைகள்.

அத்தண்டனையைக் காட்டி, அச்சுறுத்தி, குற்றங்களை அடியோடு ஒழித்து விடலாம் என்றால் – அது வெற்றிகரமானது என்றால் – உலகெங்கும் அந்த முறைமை பயன் தந்திருக்குமானால் – இன்று மேற்குலகு உட்பட உலகெங்கும் கல்லெறிந்து கொல்லுதல், கைகளை வெட்டுதல், கண்களைத் தோண்டுதல் என்ற கற்காலத் தண்டனை முறையே தொடர்ந்து இருந்திருக்கும்.

மனித நாகரிகம் மேம்பட்டு வருகின்றது. அதற்கேற்ப மனிதனின் சட்ட, நீதி, நிர்வாக முறைமைகளும் மேம்பட்டு வருகின்றன.

மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் அதை நடைமுறைப் படுத்துவதே இல்லை என்ற செயற்பாட்டுக்கு நமது தேசமே வந்து நாற்பது ஆண்டுகள் கழிந்து விட்டன.

ஆனால், இன்னும் உரிய விசாரணைகளின்றி, காவல் துறையே – பொலிஸாரே – ‘என்கவுண்டர்’ என்ற முறையில் குற்றச் சந்தேக நபர்களைப் போட்டுத் தள்ளும் முறைமைக்கு வக்காலத்து வாங்கி பாராட்டிப் புகழ்ந்து, துதிக்கும் வக்கிர நிலைக்கு நமது மக்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

நான்கு காமுகர்கள் சேர்ந்து அப்பாவி இளம் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, சீரழித்து, கெடுத்துக் கொடூரம் புரிந்த பின்னர், அந்தப் பெண்ணைக் குற்றுயிரும் குலை உயிருமாகப் போட்டு எரித்துக் கொலை செய்தார்கள் என்ற விடயத்தை அறியும் போது நெஞ்சம் பதைபதைக்கின்றது. உணர்வுகளைத் தட்டி எழுப்பி, கோபாவேசத்தை தூண்டி நிற்கின்றது என்பதும் உண்மைதான்.

இந்தக் கொடூர – குரூர – குற்றத்தைப் புரிந்த காமுகர்கள் மிகுந்த வக்கிரபுத்தி கொண்டவர்கள். நிச்சயம் நீதித்துறையால் முறையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். சட்டம் அவர்கள் மீது உரிய முறையில் பாயவேண்டும்.

ஆனால், அதை விடுத்து சட்டம் மற்றும் நீதித்துறைக்கு உதவ வேண்டிய பொலிஸாரே, அந்தக் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் விதத்தில் ‘என்கவுண்டர்’ படுகொலைகளை அரங்கேற்றுவதும் –

அதைப் பாராட்டித் துதித்துப் போற்றி மகிழும் பண்பியல்பு சமூகத்தில் கொடி கட்டிப் பறப்பதும் – மிக மோசமானவை. கேவலமான முன்உதாரணங்களும் கூட.

அந்தக் காமுகர்களின் வக்கிரபுத்திக்குச் சற்றேனும் குறைந்ததல்ல இந்த சமூகத்தின் இத்தகைய சிந்தனைப் போக்கும் என்பதை மனவேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பொலிஸாரே குற்றவாளிகளைத் தீர்மானிப்பதும் –

பொலிஸார் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் சமூகமும் சேர்ந்து தன்பாட்டில் குற்றவாளியைத் தீர்மானித்துத் தம் விருப்பப்படி தண்டனை கொடுக்க முனைவதை அங்கீகரிப்பதும் –

ஒரு விஷமத்தனமான செயற்போக்கு. விபரீதமான சமூகப் பிறழ்வுப் போக்கை எதிர்காலத்தில் நாம் சரி என ஏற்கும் இக்கட்டுக்கு இந்தப் பண்பியல்புப் போக்கு இட்டுச் செல்லும்.

தெலுங்கானாவில் கொடூரப் பாலியல் குற்றச் சந்தேக நபர்கள் என்று வலிமையாகச் சந்தேகிக்கப்படும் நான்கு காமுகர்களுக்கு, பொலிஸாரே தம்பாட்டில் ‘என்கவுண்டர்’ என்ற பெயரில் மரண தண்டனை நிறைவேற்றிய குரூரத்தை அந்த மக்கள் போற்றித் துதிப்பதற்கும் –

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த போராளிகளை வலிந்து காணமாலாக்கிய நடவடிக்கையை ‘புலிப் பயங்கரவாதிகளை ஒழித்த அதியுயர்ந்த செயலாக’ தென்னிலங்கை மதித்துப் போற்றுவதற்கும் –

ஏதும் வித்தியாசம் இருப்பதாக எமக்குத் தோன்றவில்லை. எல்லாமே நீதியைக் கையில் எடுத்துச் சீரழித்த அதிகாரவர்க்கங்களின் அற்பத்தனமான செயல்கள்தாம்.

# வள்ளிபுனம் பாலம் சீரமைப்புப் பணி



முல்லைத்தீவு, டிசெ. 08

முல்லைத்தீவு – ஏ –35 வீதியில் 28 ஆவது கிலோ மீற்றர் பகுதியில் வள்ளிபுனம் காளி கோவிலடிப் பகுதியில் உள்ள பாலத்தின் பாதிப் பகுதி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதால், அந்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அந்தப் பாலத்தைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது.

காலைக்கதிரின் நேற்றைய பதிப்பின் 12 பக்கத்தில் வெளியான படம் இந்தப் பாலத்தின் படம் அல்ல. அது வேறொரு பாலத்தின் படம். தவறுக்கு வருந்துகின்றோம்.

# வடக்கு வானில் டிசெ.26 தோன்றும் அரிய காட்சி!

## யாழில் உள்ளவர்கள் மட்டும் முழுமையாகப் பார்க்கலாம்



கொழும்பு, டிசெ. 08

நெருப்பு வளையச் சூரிய கிரகணத்தை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் முழுமையாக பார்வையிடலாம் என வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சிக்கு தெற்குப் பக்கமாக வாழ்பவர்கள் அதன் ஒரு பகுதியைப் பார்வையிடலாம்.

டிசெம்பர் 26ஆம் திகதி கிரகணத்தைப் பார்வையிடலாம் என வானியலாளர் அனுர சி. பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கிரகணம் டிசம்பர் 26ஆம் திகதி சவூதி அரேபியாவின் தம்மத்தில் முதலில் தென்படும். காலை 8 மணியளவில் தோன்றி, இந்தியப் பெருங்கடல் மற்றும் தென்னிந்தியா முழுவதும் பயணித்து வடக்கு இலங்கை வழியாகக் கடந்து செல்கிறது. இந்தக் கிரகணம் நிகழும்போது, சந்திரன் பூமியிலிருந்து சுமார் 400,000 கி.மீ தூரத்தில் இருக்கும். மணிக்கு 3,600 கி.மீ வேகத்தில் நகரும்.

இந்த கிரகணத்தின் மையக் கோடு மன்னார் முதல் வக்கரை வரை இயங்குகிறது. இலங்கைக்கு மன்னார் பகுதிக்குள்ளால் நுழையும் கிரகணம் யாழ்ப்பாணத்தில் காலை 9.34 மணிக்குத் தெரியும். இது நான்கு நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும். 9.38 மணிக்கு முடிவடைந்துவிடும்.

2010 ஜனவரி 15 இல் கடந்தசூரியகிரகணம் யாழ்ப்பாணத்தில் சுமார் 10 நிமிடங்கள் காணப்பட்டது. ஆனால் இந்த முறை இது 4 நிமிடங்களுக்கும் குறைவாகவே இருக்கும்.

சவூதி அரேபியாவில் தொடங்கும் இந்த வருடாந்த கிரகணம் வடக்கு இலங்கை மீதும், மீண்டும் இந்தியப் பெருங்கடல் வழியாக இந்தோனேசியாவுக்கும் சென்று மதியம் 12.20 மணிக்கு முடிவடைகிறது.

இந்தோனேசியாவில் கிரகணத்தின் பாதை சுமத்ரா தீவின் மேலான பரப்பில் அமையும். மிகப் பெரிய கிரகணம் காலை 10.47 மணிக்கு பாடன் என்ற இடத்தில் தெரியும். இந்தக் கிரகணம் ஐந்து மணி நேரம் நீடிக்கும்.

கிளிநொச்சியில் இருப்பவர்களுக்கு கிரகணத்தின் ஒரு பகுதியையே பார்க்க முடியும். அனுராதபுரத்தில் வசிப்பவர்கள் சூரியனின் 87 வீதம் சந்திரனால் மூடப்பட்டிருப்பதைக் காண்பார்கள். கொழும்பில் உள்ளவர்கள் சூரியனின் 84 வீதம் மூடியிருப்பதைக் காண்பார்கள் – என்றார். (ஐ)

# வவுனியா அரச – தனியார் போக்குவரத்துத் துறையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் முயற்சி!



வவுனியா அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினர் மத்தியில் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வவுனியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார்.

அத்துடன், வவுனியா தனியார் போக்குவரத்துச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச பேருந்து ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்கொள்ளும்நடைமுறைச்சிக்கல்கள்தொடர்பாகவும் கேட்டு அறிந்த கொண்டார்.

இதன்போது, புதிய பஸ் நிலையம் அமைக்கப்பட்டதையடுத்து அரச மற்றும் தனியார் பஸ்களுக்கிடையிலான நேர அட்டவணையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரண்டு தரப்பினருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், இதனால் மக்கள் பல்வேறு அளெகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டினர்.

அனைத்துத் தரப்பினதும் கருத்துக்களை அவதானித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் பிரச்சினைகளை அணுகினால் அனைத்தையும் சுமுகமாகத் தீர்க்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

நாளை திங்கட்கிழமை இது தொடர்பான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யுமாறு வவுனியா அரச அதிபருக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்தக் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களின் வாழ்வியல் முன்னேற இலகுவான பொறிமுறைகளை வகுப்போம். அவர்களுக்கான தடைகளை அகற்றி சுமூகமான பாதையைக் காட்டுவோம்.
16
2019

**நாளை**
09.12.2019
திங்கட்கிழமை
நட்சத்திரம்: பரணி சித்தம் பி.இ 5.47 வரை
திதி : துவாதசி மு.ப 10.08 வரை
இராகுகாலம் : 7.48 – 9.18
சுப நேரம் : 12.18 – 1.48

# அமெரிக்காவுடன் பேசிப் பயனில்லை தீர்வு தொடர்பில் அரசுடன் பேசுங்கள்!

## சம்பந்தனுக்கு அறிவுரை கூறுகிறார் லக்ஷ்மன் யாப்பா

கொழும்பு, டிசெ. 08

அதிகாரப் பகிர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போதைய அரசுடனேயே பேச்சு நடத்தவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமெரிக்கத் தூதுவருடன் சம்பந்தன் பேசிப் பயனில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்..

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், தற்போது இருக்கின்ற அதிகாரங்கள் இப்போது போதுமானவை. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தத் தடையில்லை. ஆனால் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற் செல்வதாயின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உட்பட பொதுமக்கள் கருத்துக் கணிப்புக்கு முதலில் செல்ல வேண்டிவரும்.

இவை குறித்து தற்போதிருக்கும் அரசிடம் பேச வேண்டும். மாறாக அமெரிக்கத் தூதுவருடன் சம்பந்தன் பேசிப் பயனில்லை. இங்குள்ள அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்கத் தூதுவருக்கு முடியாது தானே.

ஆகவே வெளிஅழுத்தங்களை ஏற்படுத்தி இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதைக் கடந்த ஜனாதிபதித் தேர்தல் உறுதிபடுத்திவிட்டது. இவர்களது வாக்குகள் இல்லாவிட்டால் ஜனாதிபதி தெரிவு செய்யமுடியாது என்ற விடயம் தற்போது மாற்றப்பட்டுள்ளது.

ஆகவே அனைத்து நாடுகளையும் நட்புறவைப் பேணி, எமது சுயாதீனத்தை அடையாளத்தை வைத்துக்கொண்டு செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)



# மன்னாரில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

மன்னார், டிசெ. 08

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக மடு பிரதேசச் செயலகத்திற்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் பாலம்பிட்டி பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது.


இந்தப் பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு தேவையான நுளம்பு வலைகள், பாய்கள் போன்றவற்றை தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை கட்சியின் பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று வழங்கினர். (ஐ)





## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தலைவராகவும் கமால்



கொழும்பு, டிசெ. 08

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நேற்றுமுன் தினம் பதவியேற்றுள்ளார்.

பாதுகாப்புச் செயலராக உள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவை, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவராகவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் புதிய பதவியையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை இராணுவ ஆட்சியை நோக்கி நகர்த்துகிறார் என்று ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் குற்றம்சாட்டி வரும் நிலையில், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கும் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பேராசிரியர் க. கைலாசபதியின் 37 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு



யாழ்ப்பாணம், டிசெ. 08

தமிழ் ஆய்வுத் துறையின் தலைமகனாக விளங்கிய முற்போக்குச் சிந்தனையாளரும், இடதுசாரிக் கல்வி ஆளுமையுமான பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு எதிர்வரும் புதன் கிழமை (பௌர்ணமி விடுமுறை தினம்) பி.ப. 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வியாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில், நினைவுப் பேருரையினை 'பிராந்திய அதிகாரப் போட்டியில் அதிமானுடர்களுக்கான அவா' என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளரும், இராஜதந்திரியுமான தெ.ஞா.மீனிலங்கோ ஆற்றவுள்ளார். இவ் உரையினைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

இந் நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)

## இந்திய – இலங்கை ராணுவத்தினரின் மித்ரசக்தி கூட்டுப் பயிற்சி ஆரம்பம்

புதுடில்லி, டிசெ. 08

இந்திய - இலங்கை இராணுவத்தினர் இணைந்து பங்கேற்கும், மித்ரசக்தி - VII கூட்டுப் பயிற்சி மகாராஷ்டிரா மாநிலத்தில் புனேவில் உள்ள அருன்ட் இராணுவ மையத்தில் இடம்பெற்று வருகிறது.

இலங்கை இராணுவத்தினரும், இந்திய இராணுவத்தினரும் இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்று வருகின்றனர்.

நேற்று முன் தினம் இந்தக் கூட்டுப் பயிற்சியின் ஒரு கட்டமாக, சிறப்புப் பயிற்சிகள் இடம்பெற்றன.

உலங்குவானூர்தி மூலமான தரையிறக்கம், இரகசியமான ஊடுருவுதல், காட்டுவழி சூட்டுப் பயிற்சி மற்றும் நவீன வெடிபொருள்களை செயலிழக்கச் செய்தல் போன்ற பயிற்சிகளில் இரண்டு நாடுகளின் படையினரும் நேற்று முன் தினம் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர்வரும், 14ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# பரங்கிப்பேட்டையில் கடலில் இருந்து கரை ஒதுங்கிய கெண்டெய்னர் பாகம்



சிதம்பரம்,டிசெ.08

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டையில், கெண்டெய்னரின் பாரிய கொள்கலனின்) உடைந்த பாகம் கரை ஒதுங்கியது. இதுகுறித்து, பொலிஸார் மற்றும் உளவுத்துறை பொலிஸார் நடத்திய ஆய்வில், அதில் ஜி.பி.எஸ். கருவி மற்றும் குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருந்தது தெரியவந்தது.

இவற்றின் மதிப்பு இந்தியப் பணத்தில் 70 லட்சம் ரூபா இருக்கும் என்றும், கெண்டெய்னரின் மற்றொரு பகுதி சில தினங்களுக்கு முன்பு சென்னையில் கரையொதுங்கியது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்கப்பூர் நிறுவனத்திற்கு சொந்தமான கப்பல் இலங்கையிலிருந்து கொல்கத்தா நோக்கி சென்றதாகவும், கடந்த 3 ஆம் திகதி ஏற்பட்ட புயலில் 25 க்கும் மேற்பட்ட கெண்டெய்னர்கள் கடலில் விழுந்து விட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆந்திர மாநிலம் நெல்லூரில் கடந்த வாரத்தில் இரண்டு கெண்டெய்னர் கரை ஒதுங்கின எனவும், இவை ஆஸ்திரேலியாவின் Safemarine என்ற நிறுவனத்திற்குச் சொந்தமானவை என்பதும் தெரியவந்துள்ளது.

## கடத்தப்பட்ட 18 இந்திய மாலுமிகளையும் மீட்க நைஜீரியாவுடன் சேர்ந்து நடவடிக்கை



கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 18 இந்திய மாலுமிகளைப் பத்திரமாக மீட்க நைஜீரியா அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

நைஜீரியா அருகேவுள்ள போன்னி தீவில் (Bonny Island) இருந்து 77 கடல் மைல்தூரத்தில் இந்தியாவின் ஹிந்துஸ்தான் பெற்றோலியம் நிறுவனத்துக்கு மசகுஎண்ணெய்ஏற்றி வந்த கிரேக்க நாட்டுக் கப்பலை கடற்கொள்ளையர்கள்செவ்வாய்க் கிழமை கடத்திச் சென்றனர்.

அதிலிருந்த 18 இந்திய மாலு மிகளும் ஒரு துருக்கி மாலுமியும் கடத்தப்பட்டனர். இதுகுறித்து டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்த வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரவீஷ் குமாரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு அவர், நைஜீரிய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பதிலளித்தார்.

## ஐந்து பெருங்கற்கால கல்லறைகள் திண்டுக்கல் அருகே கண்டுபிடிப்பு!

தேனி,டிசெ.08

திண்டுக்கல் அருகே நரசிங்காபுரத்தில் 5 பெருங்கற்கால கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட நரசிங்காபுரம் கிராமத்திற்கு அருகே உள்ள புனல்காடு, பிணக்காடு, கோம்பைத் தொழு உள்ளிட்ட மலைப்பகுதிகளில் ஆய்வாளர்கள் மேற்பரப்பாய்வு செய்தனர். அப்போது பெருங்கற்காலத்தை சேர்ந்த ஐந்து கல் பதுக்கைகள் எனப்படும் கல்லறைகள் கண்டறியப்பட்டன. இதுகுறித்து வரலாற்றுத் துறை பேராசிரியர் மாணிக்கராஜ் கூறியவை வருமாறு : –

கல் பதுக்கை என்பது மலைசார்ந்த இடங்களின் அடிவாரப் பகுதிகளில் தரையின் கீழ்பகுதியில் சதுரம் அல்லது செவ்வக வடிவில் குழி தோண்டி அமைக்கப்படும் பெருங்கற்கால மக்களின் கல்லறையாகும்.

கோம்பைக்காடு பகுதியில் ஐந்து கல் பதுக்கைகள் காணப்படுகின்றன. இதில் ஒரு கல்லறையில் குறுக்குச்சுவர் போன்று பலகை பிரிக்கப்பட்டுள்ளது. இக்கல்பதுக்கையில் இறந்த மனிதனின் எலும்புகளை, தாழிகளில் வைத்தும் இவற்றுடன் ஈமப்படையல் பொருள்கள் வைத்து புதைத்திருக்கலாம். நான்கு அறைகளாக பிரிக்கப்பட்டுள்ள இக்கல்பதுக்கை, ஒரே



குடும் பத்தை சேர்ந்தவர்களுக்காக எடுக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இனக்குழுச் சண்டையில் இறந்த வீரர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கலாம்.

இத்தகைய பெருங்கற்கால கல்லறைகள் கால வரையறை என்பது பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காலமான கி.மு 500 முதல் கி.பி 500 வரையிலான காலகட்டத்தில் உள்ளதாக அறியப்படுகிறது. – இவ்வாறு கூறினார்.

## தமிழகத்தில் வெங்காய விலை எகிறியது இலங்கைப் பணத்தில் கிலோ ரூ.500/=

சென்னை,டிசெ.08

சென்னை கோயம்பேட்டில் சின்ன வெங்காயம் இந்தியப் பணத்தில் ரூ.200க்கு (இலங்கைப் பணத்தில் சுமார் ரூ.500க்கு) விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து காய்கறி இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்தது. இதனால் காய்கறி சந்தையில் அவற்றின் வரத்து குறைந்தது. இவற்றில் எளிதில் அழுகக் கூடிய வெங்காயத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது.

தொடர்மழை, விளைச்சல் மற்றும் வரத்து குறைவு ஆகியவற்றால் கோயம்பேடு காய்கறிச் சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் இறுதியில் யாரும் எதிர்பாராத வகையில் பெரிய வெங்காயம் எனப்படும் பல்லாரி வெங்காயம் விலை உயரத் தொடங்கியது. தமிழகத்தின் கோவை உள்ளிட்ட பகுதிகளில் சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை ஆனது. அதுவே காய்கறி கடைகளில் வெங்காயம் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், சென்னை கோயம்பேட்டில் கடந்த ஒக்டோபர் இறுதியில் கிலோ ரூ.25க்கு விற்பனை செய்யப்பட்ட வெங் காயம் திடீரென நவம்பர் மாத தொடக்கத்தில் 3 மடங்கு உயர்ந்து ரூ.80க்கு விற்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். சென்னை உள்பட பிற நகரங்களிலும் இந்த விலை உயர்வு இருந்தது.

இதன்பின் தமிழகம் முழுவதும் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் அரசு கொள்முதல் செய்த வெங்காயத்தை வெளிச் சந்தையைவிட குறைவாக ஒரு கிலோ ரூ.30, ரூ.40 விலையில் 2 ரகங்களில் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்தது. சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள 79 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலமாக வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது.

எனினும் வெங்காய விலை தொடர்ந்து உயர்ந்து ரூ.100ஐ தொட்டது. பின்னர் ரூ.120க்கும், ரூ.160க்கும் விலை உயர்ந்தது. விலை உயர்வை ஈடுகட்ட மத்திய அரசாங்கம் வெளிநாடுகளில்



இருந்து 1 லட்சத்து 20 ஆயிரம் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், சென்னை கோயம்பேட்டில் விற்கப்பட்டு வந்த பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூ.160ல் இருந்து ரூ.180 ஆகவும், சின்ன வெங்காயம் ரூ.180ல் இருந்து ரூ.200 ஆகவும் உயர்ந்துள்ளது.

## பிளாஸ்டிக்கை விட பேராபத்தான 'இ - வேஸ்ட்..'! உலகளவில் இந்தியாவுக்கு நான்காவது இடம்

மண்ணை மாசடையச் செய்யும் பிளாஸ்டிக்கை விட பேராபத்தை தரக்கூடியதாக 'இ-வேஸ்ட்' ('இ' கழிவு) உருவாகியுள்ளது.

இ – கழிவை உருவாக்குவதில் உலக அளவில் நான்காவது இடத்தில் உள்ளது இந்தியா. இந்திய அளவில் இரண்டாவது உள்ளது தமிழகம்.

### இ-வேஸ்ட் என்பது என்ன?

நாம் அன்றாடம் பயன்படுத்தும் செல்போன், கம்ப்யூட்டர், லப்டாப், டி.வி, ஏசி போன்றவைகளின் தேவையற்ற, பயனற்ற மற்றும் பழுதான உதிரிபாகங்களை – அதாவது

எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக் பொருட்களின் உதிரி பாகங்களின் கழிவுகளைத்தான் – இ – வேஸ்ட் என்கிறோம்.

பிளாஸ்டிக் கழிவால் ஏற்படும் பாதிப்பு அதிகம் என்றால், அதைவிட 60 முதல் 100 சதவீதம் வரை இயற்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும், தீங்கு தரக் கூடிய லெட், கட்மியம், மெர்குரி (இரசம்)போன்ற இரசாயனங்களால் தயாரிக்கப்படுபவை எலக்ட்ரானிக் பொருட்கள்.

தமிழகத்தில் மட்டும் ஆண்டுக்கு மூன்று முதல் நான்கு தொன் வரையிலான இ – வேஸ்ட் உருவாவதாகக் கூறப்படுகிறது. வரும் காலங்களில் புவி வெப்பமயமாவதையும், கடலில் நீர்மட்டம் உயர்வதையும் தடுக்க முடியாது என்கின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்..

கம்ப்யூட்டர் உதிரி பாகங்களில் தேவையானவற்றைப் பிரித்தெடுக்க ரசாயனங்களை பயன்படுத்துவதாகவும், காற்றுமாசு ஏற்பட இதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது.

இ – வேஸ்ட்களை எரித்தாலும், மண்ணில் புதைத்தாலும் 95 சதவீத மாசு ஏற்படும் என்றும், இதுகுறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லை என்றும் கூறுகின்றனர் சமூக ஆர்வலர்கள்.

தமிழகத்தில் இதுபோன்ற இ – வேஸ்ட்களை சேகரித்து மறு சுழற்சி செய்யவும், பாதுகாப்பாக அழிப்பதற்கும் இரண்டு நிறுவனங்கள் இருந்தாலும், இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

நினைத்த மாத்திரத்தில் மின்னணு மற்றும் மின்சாதனப் பொருள்களை வாங்காமல், தேவைக்கு ஏற்ப பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் இ – வேஸ்ட் உருவாவதை கட்டுப்படுத்த முடியும். சுற்றுச்சூழல் மாசு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# ஆப்கான் வான் தாக்குதலில் தலீபான்கள் 15 பேர் மரணம்

## மற்றொரு மோதலில் 13 பேர் பலி

காந்தகார்,டிசெ.08

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 15 தலீபான்கள் பலியாகினர். மேலும் மற்றொரு மோதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலீபான் தீவிரவாதிகள் மீதான தாக்குதல்களை உள்நாட்டுப்படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

இந்த நிலையில் அங்கு காந்தகார், ஹெல்மாண்ட் மாகாணங்களில் தலீபான் பயங்கரவாதிகள் பதுங்கி இருந்து, உள்நாட்டுப்படைகள் மீது தாக்குதல் நடத்தச் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர் என்று படைத்தரப்புக்குத் தெரியவந்தது.

இதையடுத்து காந்தகார் மாகாணத்தில் நேஷ் மாவட்டத்தில் தலீபான்கள் மறைவிடத்தைக் குறிவைத்து இராணுவ விமானங்கள் வியாழனன்று குண்டு வீச்சு நடத்தின. இதில் 9 தலீபான் தீவிரவாதிகள் பலியாகினர்.



இதேபோன்று ஹெல்மாண்ட் மாகாணத்தில் நாஹர் இ சரஜ் மாவட்டத்தில் நடத்தப்பட்ட வான்தாக்குதலில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே குண்டூஸ் மாகாணத்தில் ஜாய் பேகம் மற்றும் கிர்ஜிஸ் கிராமங்களில் பொலிஸ் சோதனைசாவடிகள் மீது தலீபான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்கு பொலிஸ் படையினர் பதிலடி கொடுத்தனர். இருதரப்பினர் இடையே பலத்த துப்பாக்கிச்சண்டை நடந்தது.

இந்த மோதலில் 10 பொலிஸார் கொல்லப்பட்டனர். 3 தலீபான் தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து குண்டூஸ் மாகாணத்தில் தலீபான் தீவிரவாதிகளைத் தேடும் வேட்டையைப் பாதுகாப்புப் படைகள் தீவிரப்படுத்தி உள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

# அமெ. இராணுவ ஹெலி வீழ்ந்து நொறுங்கியதில் 3 வீரர்கள் பலி!



வொஷிங்டன்,டிசெ.08

அமெரிக்காவின் மின்னசோட்டா பகுதியில் அந்நாட்டு இராணுவத்திற்கு சொந்தமான யு.என் – 60 பிளாக் ஹொக் ரக ஹெலிக்கொப்டர்ஒன்று நேற்று முன்தினம் சோதனை ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அந்த ஹெலிக்கொப்டரில் மூன்று இராணுவ வீரர்கள் இருந்தனர்.

இந்த நிலையில், தரைக் கட்டுப்பாட்டுத் தளத்துடனான தனது தொடர்பை அந்த ஹெலிக்கொப்டர் திடீரென இழந்தது.

இதையடுத்து, மின்னிபோலிஸ் நகரிலிருந்து 95 கி.மீ. தொலைவில் உள்ள செயின்ட் கிளவுட் பகுதியில் ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கிக் கிடந்தது தெரியவந்தது. இந்த விபத்தில் அந்த ஹெலிக்கொப்டரில் இருந்த மூன்று வீரர்களும் உயிரிழந்தனர்.

'மின்னசோட்டா தேசிய பாதுகாப்புப்படை வீரர்கள் உயிரிழந்தமை அவர்களது குடும்பத்தாருக்கும் நமக்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விபத்துத் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது' என மின்னசோட்டா தேசிய பாதுகாப்புப்படையின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் திருமண விழாவில் 11 பேர் சாவு!

## 30 பேர் படுகாயம்; ஈரானில் சோகம்

தெஹ்ரான்,டிசெ.08

ஈரானில் திருமண விழாவில் இடையே எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈரான் நாட்டின் குர்திஸ்தான் மாகாணத்தில் உள்ள சாகேஸ் நகரில் நேற்று முன்தினம் திருமண விழா ஒன்று நடந்தது. இதற்காக மணமக்களின் உறவினர்கள் ஏராளமானோர் அங்கு வந்திருந்தனர்.

திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்த வேளையில், திடீரென அங்கிருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியதால் தீ விபத்து ஏற்பட்டது. கண் இமைக்கும் நேரத்தில் நடந்த இந்த விபத்தில் அங்கு வந்திருந்த உறவினர்களில் 11 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் படுகாயம் அடைந்த 30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



அவர்களில் சிலர் பலத்த தீக்காயம் அடைந்திருப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# ரஷ்யாவில் பனிக் கரடிக் கூட்டம் ஊருக்குள் புகுந்ததால் பரபரப்பு



மொஸ்கோ,டிசெ.07

ரஷ்யாவில் ஊருக்குள் பனிக்கரடிகள் புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ரஷ்யாவின் சுகோட்கா பிராந்தியத்தில் கேப் ஸ்மிட் என்ற இடத்தில் ஏராளமாக பனிக்கரடிகள் வசித்து வருகின்றன. இங்கு தற்போது வெப்ப நிலை நிலவுவதால் பனி உறைந்து போக காத்திருக்கிறபோது, பனிக்கரடிகள் பக்கத்தில் உள்ள ரிர்காபிய் கிராமத்துக்கு உணவு தேடி அவ்வப்போது வந்து விடுகின்றன. இப்போது ஒரே நேரத்தில் 56 பனிக்கரடிகள் அந்த கிராமத்துக்குள் புகுந்திருக்கின்றன எனக் கணக்கிட்டுள்ளனர்.

இந்தப் பனிக்கரடிகள் தாக்கும் அச்சம் இருப்பதால் பொதுமக்களிடையே பதற்றம் நிலவுகிறது. அங்கு நடக்கவிருந்த பொதுநிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. பள்ளிக்கூடங்களில் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்துக்கு அடிக்கடி பனிக்கரடி வருவதால் அங்கிருந்து பொதுமக்களை வெளியேற்ற வேண்டும் என்று வல்லுநர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

பருவ நிலை பனிக்கரடிகளுக்கு சாதகமாக இருக்கிறபோது, குறிப்பாக உறைபனி நிலவுகிறபோது அவை கடல் முயல்களை வேட்டையாட சென்று விடுமாம்.

ஆனால் உலக வெப்பமயமாதல் காரணமாக சுகோட்கா பிராந்தியத்தில் நல்ல வெப்பம் நிலவுவதுதான் பனிக்கரடிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது; அது, உணவு தேடி அவற்றை ஊருக்குள் வர வைக்கிறது எனக் கூறப்படுகிறது.

# கொள்ளையர் மீது அமெ. பொலிஸார் சூடு; 2 கொள்ளையர் உட்பட நால்வர் உயிரிழப்பு



வொஷிங்டன்,டிசெ.08

அமெரிக்காவில் கொள்ளயர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் இரண்டு கொள்ளயர்கள் உட்பட 4 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் சில கொள்ளையர்கள் துப்பாக்கிகளுடன் புகுந்தனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸார் கோரல் கேபில்ஸ் பகுதியில் உள்ள அந்த நகைக்கடைக்கு விரைந்து சென்றனர். பொலிஸார் வருகின்றமையை அறிந்துகொண்ட கொள்ளயர்கள், ஒரு தனியார் பார்சல் நிறுவனத்தின் வாகனத்தை வழிமறித்து, சாரதியைப் பிணைக்கைதியாக வைத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

பொலிஸார் அந்த வாகனத்தைப் பின் தொடர்ந்து கொள்ளயர்களைத் துரத்திச் சென்றனர். அந்த வாகனம் ப்ரோவார்டு பகுதிக்கு வந்த போது போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டது.

அப்போது பொலிஸாரை நோக்கித் கொள்ளயர்கள் துப்பாக்கியால் சுட்டனர் எனக் கூறப்படுகிறது. இதற்குப் பொலிஸார் பதில் தாக்குதல் நடத்த முற்பட்ட போது அந்த இடத்தில் துப்பாக்கிச் சமர் நடந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு கொள்ளயர்கள், வாகனத்தின் சாரதி மற்றும் பொது மக்களில் ஒருவர் என மொத்தம் 4 பேர் பலியாகினர்.

இந்தச் சம்பவத்தில் நகைக்கடை ஊழியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

# சஜித்துக்கு ஆதரவு வழங்க முன்வந்தார் மைத்திரிபால

## அசோக அபேசிங்க பரபரப்புத் தகவல்



கொழும்பு, டிசெ. 08

ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதற்கு மைத்திரிபால சிறிசேன பச்சைக்கொடி காட்டியிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவால் – இறுதி நேரத்தில் அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பட்ட அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

2018 இல் நடைபெற்ற உள்ளாட்சிச் சபைத் தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 15 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் 50 சதவீதத்துக்கும் மேல் வாக்குகளைப் பெறவேண்டுமாயின் சுதந்திரக்கட்சியின் ஆதரவு அவசியம் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனகூட ஏற்றுக்கொண்டிருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்துமாறும், அவர் ஆதரவு வழங்கினால் சுமார் ஏழரை இலட்சம் வாக்குகள்வரை கிடைக்கலாம் என்றும் கட்சியிடம் யோசனை முன்வைத்தேன்.

இதன் அடிப்படையில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரியுடன் கலந்துரையாடினோம். ஆதரவு வழங்க முடியாது என அவர் கூறவில்லை.

ரணில் விக்கிரமசிங்க மேடை ஏறுவதுதான் சர்ச்சையாக இருந்தது. அவ்வாறு இல்லாவிட்டால் மைத்திரி நிச்சயம் ஆதரவு வழங்கியிருப்பார் என நம்புகின்றேன்.

அவ்வாறு வழங்கியிருந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வாக்குகளில் ஏழரை இலட்சம் வாக்குகள் குறைந்து, அது சஜித்தின் வாக்கு வங்கியில் சேர்ந்திருக்கும்.

55 இலட்சம் வாக்குகளுடன் ஏழரை இலட்சத்தைக் கூட்டினால் 62 இலட்சம் வாக்குகள் சஜித்துக்குக் கிடைத்திருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்த 69 இலட்சம் வாக்குகளில் ஏழரை இலட்சம் வாக்குகளைக் கழித்தால் 61 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகளே கிடைத்திருக்கும். இதன் அடிப்படையில் சஜித் வெற்றி பெற்றிருப்பார் – என்றார். (ஐ)

## 'மிஸிஸ் வேர்ள்ட்' பட்டம் சூடினார் இலங்கை அழகி



கொழும்பு, டிசெ. 08

2020 ஆம் ஆண்டிற்கான திருமணமான பெண்களுக்கான உலக அழகிப் போட்டியில் (Mrs.World) இலங்கையைச் சேர்ந்த கரோலின் ஜூரி மகுடத்தை வென்றுள்ளார்.

35 வருடங்களுக்கு பிறகு இலங்கைப் பெண் ஒருவர் இந்த மகுடத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவின் லாஸ்வேகாஸில் இடம்பெற்ற இறுதிப் போட்டியின்போதே அவர் மகுடம் சூடினார். ஏற்கனவே அவர் மிஸிஸ் ஸ்ரீ லங்கா என்ற விருதுக்கும் சொந்தக்காரர் ஆவார்.

இதற்கு முன்னர் இந்த விருதை 1984 ஆம் ஆண்டு ரோஸி சேனாநாயக்க வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின் உற்பத்தி அதிகரிப்பு

நாட்டில் தொடர்ச்சியாகப் பதிவாகிவரும் மழைவீழ்ச்சி காரணமாக, பிரதான நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்து காணப்படும் நதிகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக மின்சார சபை தெரிவிக்கிறது.

மேற்படி நதிகளின் நீர்மட்டம் 90 வீதம் வரை உயர்வடைந்திருப்பதால் நீர் மின் உற்பத்தியை அதிகமாக மேற்கொள்ள முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரத்துக்கான கேள்வி 55 வீதமான அதிகரித்துள்ள நிலையில் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மின் உற்பத்தியை மேற்கொள்ள சாதகமான நிலை தோன்றியுள்ளதாகவும் மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## வெள்ளத்தில் மூழ்கியது வலையிறவுப் பாலம்!



மட்டக்களப்பு, டிசெ. 08

மட்டக்களப்பு நகரையும் மண்முனை மேற்கு படுவான்கரை பிரதேசத்தையும் இணைக்கும் வலையிறவுப் பாலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக இப் பாதையால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பலர் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பிலிருந்து வவுணதீவு பிரதேசத்தை நோக்கியும் வவுணதீவு பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நகர் நோக்கியும் சென்ற மக்கள் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். தற்போது உன்னிச்சை குளத்தில் தண்ணீர் அதிகம் தேங்குவதால் குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதேவேளை மண்முனை மேற்கு பிரதேசத்திலுள்ள சாமந்தியாறு, கண்டியனாறு, மங்கிகட்டு , முள்ளாமுனை போன்ற இடங்களிலுள்ள வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்து செல்கின்றது. இவ் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற வாகனங்கள் சிலவற்றுக்குள் தண்ணீர் உட்சென்றதன் காரணமாக அவை பழுதடைந்தன.

தற்போது பெய்யும் மழை தொடர்ந்து பெய்யுமானால் இவ் வீதிகளால் பரவிச் செல்லும் நீர்மட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. (ஐ)

## 22 இலட்சம் ரூபா மோசடி செய்தவருக்கு 367 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை!

போலி ஆவணங்களைப் பயன்படுத்தித் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான 21 இலட்சத்துக்கும் அதிக பணத்தை மோசடி செய்த நிறுவனத்தின் கணக்காளர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 367 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஹிக்கடுவ லியனகே நந்தசிறி என்ற நபர் தற்போது தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு திறந்த பிடியாணை ஒன்று நீதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிக்கு 21 இலட்சம் ரூபா அபராதம் விதித்து மேல் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராகப் பணிபுரிந்த பிரதிவாதி போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி அந்த நிறுவனத்துக்கு சொந்தமான 21 இலட்சத்து 99 ஆயிரத்து 130 ரூபா பணத்தை மோசடி செய்தார் எனக் குற்றம் சுமத்தி சட்ட மா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் 19 குற்றங்களின் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகளின்போது பிரதிவாதி நீதிமன்றை புறக்கணித்து தலைமறைவாகிய நிலையில், நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த நீதிபதி பிரதிவாதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடும் ஏனைய நபர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்ட நீதிபதி, இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

## அராலியில் வீடு தீக்கிரை!

யாழ்ப்பாணம், டிசெ. 08

அராலி பகுதியில் உள்ள வீடு ஒன்று மின் ஒழுக்கினால் தீப்பற்றி முற்றாகச் சேதம் அடைந்துள்ளது.

முத்துக்குமார் இரத்தினசிங்கம் என்ற குடும்பஸ்தரின் வீட்டிலேயே இந்தத் தீப்பரவல் இடம்பெற்றுள்ளது.

ஊர் மக்கள் மற்றும் வீட்டார் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலும் வீடு முற்றாகச் சேதம் அடைந்துள்ளது. இந்த தீப்பரவல் காரணமாக எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 35 அடியாக வைத்திருக்க தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ. 08

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர் மட்டத்தை 35 அடியாக வைத்திருப்பதற்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை பத்து மணிக்கு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் இறுதிவரை 35 அடியாக வைத்திருப்பது எனவும், கடந்த வருட அனுபவத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, டிசெம்பர் மாதத்துக்குப் பின்னர் சில வேளைகளில் மழை பெய்யக் கூடும் என்றும் எனவே அதன் பின்னர் 36 அடியாக நீரைச் சேமிப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இரணைமடு குளத்தின் அனைத்து வான் கதவுகளும் – அதாவது 14 கதவுகளும் – திறக்கப்பட்டுள்ளன. (ஐ)



14 வான் கதவுகளும் திறக்கப்பட்டன

# மன்னாரில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை

## இடம்பெயர்ந்தவர்கள் 168 பேர் நலன்புரி நிலையங்களில்



மன்னார், டிசெ. 08

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வெள்ள பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் 314 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வெள்ள பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

மன்னார் நகரில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 168 அங்கத்தவர்களும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 49 அங்கத்தவர்களும், நானாட்டன் பிரதேச செயலாளர் பிரிவில் 176 குடும்பங்களைச் சேர்ந்த 570 அங்கத்தவர்களும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 102 அங்கத்தவர்களும்,முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 206 குடும்பங்களைச் சேர்ந்த 854 அங்கத்தவர்களும் வெள்ளப்பாதிப்புகளுக்கு உள்ளாகி உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

மேலும் தற்போது வரை 4 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் நகரத்தில் பெரிய கரிசல் பகுதியில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 168 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எமில் நகர் கிராமத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 22 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து தங்க வைக்கப்பட்டுள்ளனர். புதுக்கமம் பகுதியில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 101 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்த நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 12 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்த நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 83 குடும்பங்களைச் சேர்ந்த 314 அங்கத்தவர்கள் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 12 கமநல சேவைகள் நிலையங்களில் உள்ள சகல குளங்களும் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன.இதனால் வெள்ளப் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதுவரை 5653 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

உடனடியாக களத்தில் கிராம சேவையாளர்களையும், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களையும் வைத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு உரிய பணிப்புரைகளை விடுத்துள்ளோம்.

வெள்ளம் ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணமாக புலவு பயிர்ச் செய்கை அமைந்துள்ளது. புலவு பயிர்ச் செய்கையை தவிர்த்துக் கொள்ளுமாறு பல கலந்துரையாடல்களில் தெரிவித்திருந்தேன்.ஆனால் தற்போது புலவுக்குள் நெற்பயிர்ச் செய்கை செய்தன் காரணத்தினால் பெருந் தொகையான ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளது.

நீர் நிற்கின்ற நிலைகள் எல்லாம் நெல் வயல்களாக மாறியுள்ளன. அதனால் எல்லா இடங்களிலும் நீர் பரவி உள்ளது. மேலும் வாய்க்கால்களை மக்கள் மூடுகின்றமையினால் வெள்ளம் தேங்குவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

மன்னார் நகரத்தை அண்மித்த பகுதியான வங்காலையில் உள்ள இரத்தினபுரி, தோமஸ்புரி போன்ற பகுதிகளிலும் வாய்க்கால்களில் நீர் ஓடாது தேங்கி நிற்பதினாலும் அங்கு இக்கட்டான நிலை ஏற்படும்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது – என்றார். (ஐ)

# ஏப்ரல் 21 தாக்குதலுக்குக் காரணமான அமைப்புகள் சுதந்திரச் செயற்பாட்டில்!

## ஞானாசார தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 08

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குக் காரணமான அடிப்படைவாத அமைப்புக்கள் இன்னும் வெளியில் சுதந்திரமாகச் செயற்படுகின்றன எனப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இவர்களை அரசு சரியாக இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணமான, இஸ்லாம் அடிப்படைவாதத்துக்கு ஆதரவளித்த பலர் இன்று வெளியில் இருக்கிறார்கள்.

சிலர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இது பயங்கரமானதொரு செயற்பாடாகும். இதனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை அவர்கள் குழப்பக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இஸ்லாம் அடிப்படைவாதப் பிரச்சினை என்பது, இலகுவில் முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய பிரச்சினை கிடையாது.

அடிப்படைவாதக் குழுக்கள் இன்றும் நாட்டில் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதன் உறுப்பினர்கள் இந்த அரசிலும் சில முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள்.

இது பாரிய அச்சுறுத்தலான விடயமாகும். ஆனால், இவர்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், தகவல்களை வழங்கிய எம்மைப் போன்றவர்களுக்கு எதிராகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இது பாரதூரமான விடயமாகும். எனவே, அரசு உள்ளிட்ட தரப்பினர் இது தொடர்பாக இனிமேல் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம் – என்றார். (ஐ)




காலைக்கதிர் Kalaikathir



**எதிர்வரும் 10 ஆம் திகதி கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

# கார்த்திகை தீபத் திருவிழா உணர்த்தும் உண்மைகள்!



அன்னை பார்வதி தேவிக்கு பௌர்ணமி தினத்தில் சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது சிவபெருமான காட்சி கொடுத்த தினமே திருக்கார்த்திகைத் தீபத் திருநாளாக கொண்டாடப்படுகிறது என்று சொல்வதுண்டு. அதே போல, மகாபலி சக்கரவர்த்திக்கு ஜோதி வடிவாக காட்சி கொடுத்த நாளே திருக்கார்த்திகைத் தீபத்திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது என்றும் சொல்வதுண்டு.

காசிக்கு சென்று கங்கையில் குளித்தால் தான் முக்தி கிடைக்கும், ராமேஸ்வரத்திற்கு சென்றால் தான் முக்தி கிடைக்கும், ஆனால், இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு, ஜோதிப் பிளம்பான அருணாச்சலேஸ்வரரை நினைத்தாலே முக்தி தரும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.

நாம் அனைவரும் சிறு வயதில், கார்த்திகை தீபத்திருநாள் அன்று, கையில் மெழுகுவர்த்தியை ஏந்திக்கொண்டு வீதிகளை சுற்றிவந்திருப்போம். ஒரு நாள் விடுமுறை கிடைத்ததா, அந்த சந்தோசத்தை நன்றாக அனுபவிப்போம் என்று துள்ளிக் குதித்து, தீபத்திருநாளன்று வீதிகளில் சொக்கப்பானையைக் கொழுத்திப் போட்டு பொழுதைக் கழித்து மகிழ்ந்திருப்போம். ஆனால் அதற்கான உண்மையான காரணம் என்னவென்று அப்போது நமக்கு தெரியவில்லை.

### சங்க இலக்கியத்தில் திருக்கார்த்திகை



கார்த்திகை தீபத்திருநாள் என்பது சங்க காலத்தில் இருந்தே கொண்டாடப்பட்டு வருகிறது. பழந்தமிழர்களின் இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடையவாகிப்
புலமெல்லாம் பூத்தன தோன்றி
சிலமொழி தூதொடு வந்த மழை'

என்ற செய்யுளில் கார்த்திகை தீபத்திருநாளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 'தலைநாள் விளக்கின்' என்ற வரியின் மூலம் இந்த விழா பல நாள் கொண்டாடப்படும் விழா என்று அறிய முடிகிறது.

### குமாரசம்பவத்தில் திருக்கார்த்திகை

அதே போல், கி.மு முதலாம் நூற்றாண்டில் முதலாம் சந்திரகுப்தர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த மகாகவி காளிதாசரும், தமிழர்களின் கலாச்சாரத்தோடு ஒன்றிப்போன திருக்கார்த்திகை தீபத்திருநாள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அவர் இயற்றிய குமாரசம்பவம் என்னும் நூலில் இது பற்றி குறிப்பிட்டுள்ளார். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி என்ற காப்பியத்திலும் திருக்கார்த்திகை தீபம் பற்றி குறிப்புகள் உள்ளன. 'குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன கடிகமழ் குவளை பைந்தார்' என்ற குறிப்பிடப்பட்டுள்ளது.

### கார்த்திகையில் கண்விழிக்கும் மஹாவிஷ்ணு

மேலும், மஹாவிஷ்ணு கார்த்திகை மாதத்தில் தான் கண்விழித்து எழுவதாக வைணவர்கள் குறிப்பிடுகின்றனர். வைணவ ஆலயங்களில் கார்த்திகை தீபத்திருவிழா ஐந்து நாட்கள் நடைபெறும். ஐந்தாம் நாளான மகா தீபத்திருநாள் அன்று தானம் வழங்கியும் திருப்பணி செய்தும் இறைவனை வழிபட்டு மகிழ்வார்கள். இது பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியமான நற்றிணையில் உள்ளன.



### திருவண்ணாமலை

பஞ்சபூத தலங்களில் முக்கியமான நெருப்பு தலமான திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபத்திருநாள் பெரும் சிறப்பு வாய்ந்ததாகும்.

கார்த்திகை தீபத்திருநாள் எவ்வாறு உண்டானது என்பதற்கு பல கதைகள் கூறப்படுகின்றன. இருளில் மூழ்கிய பிரபஞ்சம் அதில் ஒன்று, ஒரு சமயம் அன்னை பார்வதி தேவி எம்பெருமான் ஈசனின் கண்களை விளையாட்டாக தன்னுடைய கைகைளால் மறைத்தார். அதனால் இந்த பிரபஞ்சமே இருளில் மூழ்கி, உலக உயிர்கள் அனைத்தும் துயரில் ஆழ்ந்தன. இச்செயலால் அன்னை



பார்வதி தேவிக்கு பாவம் உண்டானது. பாப விமோசனம் தேடி, காஞ்சிபுரத்திற்கு வந்து கடுந்தவத்தில் ஆழ்ந்தார்

அப்போது காட்சியளித்த சிவபெருமான், திருக்கார்த்திகை நன்னாளில் திருவண்ணாமலைக்கு வரும்படி அருள்புரிந்தார். ஈசனின் கட்டளைப்படியே பார்வதி தேவியும், திருவண்ணாமலை வந்து, அங்குள்ள பவளக்குன்று மலையில் வசித்து வந்த கௌதம மகரிஷி உதவியுடன் பர்ணசாலை அமைத்து தவமிருந்தார். பௌர்ணமி நாளில் சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் வேளை வந்தது. அப்போது எம்பெருமான் ஈசன் அன்னை பார்வதிக்கு காட்சி கொடுத்து, இடபாகத்தில் ஏற்று அருள்பாலித்தார். அந்த நாளே திருக்கார்த்திகை என்று கொண்டாடப்படுகிறது.

### விளக்கை தூண்டிய எலி

திருக்கார்த்திகை தீபத்திருநாள் கொண்டாடப்படுவதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் திருக்கைலாயத்தில், நெய்யிட்ட விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. விளக்கு அணையும் தருணத்தில் எலி ஒன்று அங்கு வந்தது. நெய்யின் வாசனையை அறிந்து அதை உண்ண நினைத்துத் திரியை இழுத்தது. அப்போது திரி தூண்டப்பட்டு தீபம் பிரகாசமாக எரிய ஆரம்பித்து.

### மஹாபலியாக மாறிய எலி

இதனால், ஒளியைத் தூண்டிவிட்ட எலியின் முன்பு சிவபெருமான காட்சி கொடுத்து மானிடப் பிறவி எடுத்து ராஜயோக வாழ்வும் தந்து அருள் புரிந்தார். அந்த எலியே மறு ஜென்மத்தில் மஹாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தார். எண்ணற்ற செல்வங்களோடு ஏகபோகமாக செருக்கோடு



வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அகங்காரத்துடன் கோவிலுக்கு சென்றார்.

### மஹாபலிக்கு அருளிய சிவன்

அங்கு பட்டாடை தரையில் புரள அலட்சியத்தோடு நடந்து சென்றதால், அங்கிருந்த அகல் விளக்கின் தீப்பொறி மஹாபலி சக்கரவர்த்தியின் மீது பட்டு பற்றி எரிந்து உடல் புண்ணானது. உடனடியாக அகந்தை அகன்ற மஹாபலி தன்னுடைய இரு கைகளையும் கூப்பி சிவபெருமான வேண்டி, தன்னுடைய உடலில் ஏற்பட்ட தீக்காயத்தை போக்கித் தன்னை காத்தருளுமாறு வேண்டினார். தீபப்பொறியால் ஏற்பட்ட ரணத்திற்கு தினமும் கோவிலில் தீபங்களை ஏற்றி தொழுது வா, காலப்போக்கில் அந்த நோய் நீங்கப்பெற்று இன்புறுவாய் என்று அசரீரியாக சொல்வதைக் கேட்டு மன்னன் மஹாபலி மகிழ்ந்தான்

### ஜோதி வடிவில் சிவபெருமான்

தினமும் கோவிலுக்கு சென்று வரிசையாக நெய் தீபங்களை ஏற்று வழிபட்டு வந்தான். இவ்விதம், தினந்தோறும் கோவிலில் தீபம் ஏற்றி வந்த போது, கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி நாளில் கிருத்திகை நட்சத்திரல் சந்திரன் சஞ்சரிக்கும் வேளையில், ஈசன் மனமகிழ்ந்து ஜோதி வடிவில் வந்து ஒளிப்பிழம்பாக மஹாபலிக்கு காட்சி கொடுத்தார். உடனடியாக மஹாபலியின் நோய் நீங்கியது. இவ்வாறு, மஹாபலி சக்கரவர்த்தி தொடங்கி வைத்த தீப வரிசை வழிபாடே கார்த்திகை தீபத் திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது என்றும் சொல்வதுண்டு.




# என்கவுண்டர்...!

உலகளவில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதை நினைத்து இந்தியராய் பிறந்த அனைவரும் வெட்கப்பட வேண்டும். பெண்களை தெய்வமாக வழிப்படும் இந்நாட்டில், அதே பெண்களை வெறும் சதையும், தோலும் கொண்ட ஓர் உருவமாக மட்டும் பார்க்கும் ஆண்களும் இருக்கிறார்கள். 2012ஆம் ஆண்டு இந்தியாவின் தலைநகரான டெல்லியில் ஓடும் பஸ்ஸில் நிர்பயா என்ற பெண் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு இறந்தார். இது இந்தியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அது மட்டுமல்லாமல் உலகளவில் பேசப்பட்டது

கடந்த 10 ஆண்டுகளில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைகள் இந்தியாவில் அதிகரித்து வருகிறது. காஷ்மீரில் 8 வயது சிறுமி ஆஷிபா மூன்று நாள்கள் பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்துள்ளனர். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறு கலாசாரங்கள், உணவு, உடை என மாறுபட்டியிருந்தாலும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மட்டும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன.

## தெலுங்கான பெண் மருத்துவர்

தெலுங்கான மாநிலம் மெஹபூப்நகர் மாவட்டத்தை சேர்ந்த கால்நடை பெண் மருத்துவர், கடந்த 27ஆம் திகதி பணி முடிந்து இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, மர்மநபர்களால் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு எரித்து கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது



## நான்கு பேர் கைது

இந்த சம்பவம் தொடர்பாக, முகமது பாா, கேசவலு, சிவா, நவீன் ஆகிய நான்கு பேரை கைது செய்தது தெலுங்கான காவல் துறை. அவரிகளிடம் மேற்கொண்ட விசாரணையில், நீண்ட நாள்களாக திட்டுமிட்டு இதை செய்துள்ளன எனத் தெரிவித்தனர்.

## எரித்துக்கொலை

ஹைதராபாத் புறநகர் பகுதியான ஷாத்நகர் அருகே தினமும் அப்பெண் டோல்கேட்டை கடப்பதை கண்ட சிலர் வேண்டுமென்றே அவரின் வாகனத்தை பஞ்சர் செய்துள்ளனர். இதையடுத்து, அப்பெண்ணுக்கு உதவுவது போல சென்று, அவரை அங்கிருந்து கடத்திச் சென்று வாயில் மதுவை ஊற்றி, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். பின்னர், லொறியில் அப்பெண்ணை ஏற்றி சத்தனபள்ளி டோல் கேட் அருகே இருக்கும் பாலத்தின் கீழ் வைத்து எரித்து இருக்கிறார்கள்

## நீதிமன்றம்

நாட்டையே உலுக்கிய இந்த சம்பவத்தில் குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்தது. குற்றவாளிகளை விரைவாக விசாரித்து, கடுமையான தண்டனை வழங்கவும், வழக்கை விசாரிக்க விரைவு நீதிமன்



றத்தை அமைத்தது தெலுங்கான அரசு. நிர்பயாவின் பெற்றொரும் இதற்குக் குரல் கொடுத்தனர். குற்றவாளிகளிடமும்கடந்தஒருவாரமாகதெலுங்கான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

## என்கவுண்டர் செய்த தெலுங்கான பொலிஸ்

இந்நிலையில், விசாரணையின் ஒரு பகுதியாக, வெள்ளி அதிகாலை 3.30 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திற்கு நான்கு பேரையும் அழைத்து சென்ற பொலிஸார் எப்படி கொலை செய்தனர் என்பதை நடித்து காட்டச் செய்தனர். அப்போது 4 பேரும் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றனர் எனவும்,பொலிஸாரை தாக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. இதனால் அவர்கள் நான்கு பேரையும் என்கவுண்டர் செய்ததாக தெலுங்கான பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

## நன்றி தெரிவித்த நிர்பாயாவின் தாய்

தெலுங்கானாவில் குற்றவாளிகள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது என்று நிர்பயாவின் தாய் ஆஷா தேவி தெரிவித்துள்ளார். மேலும் தெலுங்கான பொலிஸாருக்கு நன்றியும் அவர் தெரிவித்துள்ளார். இன்றைய நாளில் குற்றவாளிகளுக்கு இதுபோன்ற தண்டனை அவசியப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

## தினமும் செத்துக்கொண்டு இருக்கிறோம்

“தனது பெண்ணைப் பாலியல் வன்கொடுமை செய்தவர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். ஆனால், நாங்கள் தினமும் செத்துக் கொண்டு இருக்கிறோம். தெலுங்கான பெண்ணின் பெற்றோருக்காவது, இந்த நிலை வேண்டாம். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேரையும் தெலுங்கான பொலிஸார் என்கவுண்டர் செய்தமை மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

## பாலியல் வன்கொடுமை தினமும் 100 சம்பவங்கள்

இந்தியாவின் தேசிய குற்ற ஆவணப் பதிவு காப்பகம் (என்.சி.ஆர்.பி) படி, ஒவ்வொரு நாளும் சுமார் 100 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படுகின்றன. 2017ஆம் ஆண்டு தமிழகத்தில் மட்டும் 283 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 32,000 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளன என 2017 தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தடை விதிக்கப்படுவதாலும், பாலியல் வன்கொடுமைக்கு உட்பட்ட அவமானம் காரணமாகவும், பல பெண்கள் இத்தகைய குற்றங்கள் குறித்து முறைப்பாடு அளிப்பதற்கு முன்பு பின் வாங்குகிறார்கள் என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

## தமிழக பொலிஸாரின் என்கவுண்டர்கள்

2010ஆம் ஆண்டு கோவையில், பத்து வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து, நீரில் மூழ்கடித்துக் கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட சாரதி மோகன் ராஜ் விசாரணைக்காக



கொண்டு செல்லப்பட்ட போது என்கவுண்டரில் கொல்லப்பட்டார். பாலியல் வன்கொடுமை வழக்கில் ஒரே ஒரு என்கவுண்டர் மட்டுமே தமிழகத்தில் செய்யப்பட்டுள்ளது. மற்ற காரணங்களுக்காக தமிழகத்தில் இதுவரை 80 பேர் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

## தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை வழக்குகள்

அரியலூர் நந்தினி, ராகவி, சிறுமி ஹாசினி, காஞ்சிபுரம் ரோஜா போன்று 5 வயது சிறுமிகள் முதல் பருவ வயது பெண்கள் வரை நிறைய பேர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் தமிழகத்தையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வழக்கும் நீதிமன்றத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களில் பலருக்கு நீதி கிடைப்பதே இல்லை. காரணம் பொருளாதாரப் பின்புலம், சாதிய அடையாளம் மற்றும் அரசியல் அதிகாரம் உள்ளவர்களுடன் தொடர்பு.

## நிலுவையில் இருக்கும் வழக்குகள்

நிர்பயா சம்பவத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்ட சட்டத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு மூன்று மாதங்களில் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், ஆயிரக்கணக்கான வழக்குகள் நீதிமன்றத்திற்கு வராமல் காவல் நிலையத்திலேயே நிலுவையில் வைக்கப்பட்டிருக்கின்றன சமூக செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

தெலுங்கான காவல் துறைக்கு இந்தியா முழுவதிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்களை இதேப்போன்று சுட்டுக் கொல்ல வேண்டும் என்று பொதுமக்களும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



## குடும்பங்களில் இயேசு பிறப்புக் குடில் பாரம்பரியம் ஊக்குவிக்கப்பட வேண்டும்

நாம் கடவுளுடன் கொண்டிருக்கும் நெருக்கம் நம் சகோதர, சகோதரிகளை அன்புடன் அணுகி அவர்கள் அனைவருக்கும் இரக்கம் காட்ட வேண்டும் என்ற அழைப்பை விடுக்கிறது. தொழில் கூடங்களிலும் கல்விச் சாலைகளிலும், மருத்துவ மனைகளிலும் நகர் சந்திப்புகளிலும், வீடுகளிலும் இயேசு பிறப்புக் குடில் உருவாக்கப்படும் பாரம்பரியத்தை தான் ஊக்குவிக்கிறேன் – எனத் திருத்தந்தை கூறியுள்ளார்.


# காலைக்கதிர்
Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ஜெபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.


## திருத்தந்தை அருள்பணியாளராகி 50 ஆண்டுகள்

13 டிசம்பர் 2019 அன்று குருத்துவ பொன் விழாவை திருத்தந்தை கொண்டாடுகிறார். 1936 ஆம் ஆண்டு பிறந்த திருத்தந்தை 33ஆவது வயதில் அருள் பணியாளராகவும் 56ஆவது வயதில் ஆயராகவும் 77வது வயதில் திரு அவையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். 83 வயதான திருத்தந்தை இயேசு சபை துறவியாக 61 ஆண்டுகளையும் குருவாக 50 ஆண்டுகளையும் நிறைவு செய்துள்ளார்.

# நம்பிக்கையோடு அடுத்த தளத்தை நோக்கி தொடர்ந்தும் நகருவோம்

### திருவருகைக் கால மடலில் யாழ் ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அமைப்பு

ஒரு பெரும் போர் முடிந்த நிலையில் எம் இருப்பை மீண்டும் தக்க வைத்துக் கொள்ளப் பாடுபடும் ஓர் இனத்தின் எச்சங்களாக நின்று பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எம் காயங்களும் வலிகளும் நிஜமானவை. ஆனால் எம் வாழ்வை நம்பிக்கையோடு அடுத்த தளத்தை நோக்கி நகர்த்திச் செல்வதற்கு முயற்சிப்பது மிக அவசியமானது. உன் சகோதரன் ஆபேல் எங்கே? (தொடக்கநூல் 4:9) என இறைவன் கேட்கிறபோது எம் சகோதரர்களின் காவலாளிகள் நாம் என் பதையும் பொறுப்புக் கூறலுக்குரியவர்கள் நாம் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

உடல் ரீதியாக மட்டுமன்றி உளத்தாக்கங்களால், தனிமைப்படுத்தல்களால், சமுதாயப் புறக்கணிப்புக்களால் ஆடம்பர ஆசைகளுக்கு அடிமைப்பட்டு, நிம்மதி இன்மைகளால், தொடரும் வன்முறைப் போதைக் கலாசாரங்களின் அதீத வளர்ச்சியினால், வறுமையினால் எனப் பல நிலைகளில் துயருறும் எம் சக மனிதர்களோடு உடனிருக்கவும் நாளைக்கான புதிய நம்பிக்கையை ஊட்டவும் இக்காலம் எம்மை அழைக்கின்றது.

எல்லோருமே ஏதோ ஒரு வகையில் துயருறுபவர்களாக இருந்தாலும், வயிற்றில் தாங்கிய கருவோடு எலிசபெத்து வீடு வரை நடந்து சென்ற அன்னை மரியாவின் மனதோடு காயப்பட்ட மருத்துவனாக தன்னை வெளிப்படுத்தும் இயேசுவின் உண்மைச் சீடர்களாக, துயருறுவோரின் நம்பிக்கையாக விளங்கிட இவ்வாண்டு எம்மை அழைத்து நிற்கின்றது. எம் பங்குகளில் பல்வேறு பக்திச் சபைகளூடாக நல்ல பல திட்டங்களைத் தீட்டித் துயருறுவோரின் நல்வாழ்வுக்காக உழைக்க உங்களைப் பணிக்கின்றோம்.

இலங்கை நாட்டின் புதிய ஜனாதிபதிக்கான தேர்தலின் முடிவுகள் தமிழ்பேசும் மக்களின் பெரும் கனவொன்று உடைந்து போனது போன்ற ஓர் ஏமாற்ற உணர்வை



உண்டுபண்ணுவனவவே தெரிகின்றன. நாம் ஒரு போதும் உடைந்து போகவோ சோர்ந்து போகவோ கூடாது. கடவுள் கோணலான கோடுகள் நடுவே அழகான சித்திரங்களை வரைய வல்லவர் என நம்புவோம். கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை (லூக்காஸ் 1:37) என்பது தான் காலங்களையெல்லாம் தாண்டிய நம்பிக்கையின் செய்தியாக எமக்குத் தரப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இந்தத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் வெளிப்படுத்திய ஒட்டுமொத்தத் தீர்மானம் ஒரு பெரும் வெற்றியாகும். இந்த ஒற்றுமையின் பலம் ஒரு தேசிய இனமாக ஜனநாயகத்தின் தளத்தில் நாம் நிலைகொள்ள மிகத் தேவையானதும் ஆகும். இறைவன் நல்லவர், நன்மையையே எம் நாட்டுக்குச் செய்வார் என்பதே எமது நம்பிக்கை ஆகவேண்டும். அடுத்த தேர்தலுக்கான களங்கள் வரும் நிலையில் நம்பிக்கையோடு தொடர்ந்தும் எமது சரியான தெரிவுகளை மேற்கொண்டு அமைதியான வளர்ச்சி நோக்கி மேலெழுகின்ற தேசமாக எம் நாட்டை, எம் வாழ்வைக் கட்டியெழுப்ப உழைப்பதும் செபிப்பதும் எமது கடமையாகும்.

# காலத்திற்கேற்ப திட்டங்களை அமைப்பதுதான் சிறந்தது பாதை

### மன்னார் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ



கடந்த காலங்களில் இப்படி இருந்தது இப்படி இருக்கவில்லை என்பதை விடுத்து காலத்துக்கேற்ற விதத்தில் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என 21 நவம்பர் 2019 முதல் மூன்று தினங்கள் மன்னார் மறைமாவட்ட குடும்ப பொதுநிலையினரின் அருட்பணி மையத்தில் மாநாட்டுச் செயலாளர் டெஸ்மன் குலாஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற அருட்பணி திட்டமிடல் மாநாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

இம் மாநாட்டில் மன்னார் மறைமாவட்டத்தின் 46 பங்குகளிலிருந்து சுமார் இருநூறு பேர் கலந்து கொண்டனர். மன்னார் ஆயர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

மன்னார் மறைமாவட்டத்தில் 90 ஆயிரம் கத்தோலிக்கர்கள் இருக்கின்றார்கள். நாம் அன்பிய வாழ்வின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி என்ற விருது வாக்குக்குடன் செயற்படுகிறோம்.

புதுப்பித்தல் என்பது இலகுவாக முடியும் காரியமல்ல. நாம் இவ்வருடமும் புதுப்பித்தலுக்கு முக்கியத்துவம் வழங்கி, விசேடமாக அன்பியத்துக்கு சிறப்பு கவனம் செலுத்துகிறோம். நாம் இம்முறை அன்பியத்துக்கு முக்கியத்துவம் வழங்கி சிந்திப்பதன் காரணம் அன்பியம் இலங்கையில் ஆரம்பமாகி 25 வருடங்கள் நிறைவு பெறுகின்றன என்பதாகும். ஆயர்களின் சுற்றுமடலும் வெளியிடப்படும். ஆயர் ஒவ்வொருவருக்கும் திருத்தந்தையினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றுமடல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் திருமடலில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிறு திருவழிபாட்டிலும் விவிலிய நாளாகக் கொண்டாட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்டம் ஆரம்பமாகி 38 வருடங்கள் ஆகிவிட்டன. மறைமாவட்டத்தில் இன்னும் அதிகமான விடயங்களை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். காலத்துக்கு ஏற்ப எமது மக்களுக்கு ஏற்ப எமது மறைமாவட்டத்துக்கு ஏற்ப நாம் திட்டங்களை வகுத்து புதுப்பித்தலை ஏற்படுத்துவோம் என தெரிவித்தார்.

## தேசிய கத்தோலிக்க இளையோரின் ஒன்றுகூடல் சிலாபத்தில் பூர்த்தி




77ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் சிலாபம் மறைமாவட்ட தலவில புனித அன்னம்மாள் திருத்தலத்தில் 22 நவம்பர் 2019 அன்று 'அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு இருக்கின்றேன்' என்ற கருப்பொருளில் நடைபெற்றது. 78ஆவது தேசிய இளையோர் ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் நடைபெறவுள்ளமையால் நிகழ்வின் நிறைவில் சிலாபம் மறை மாவட்ட இளையோரிடமிருந்து யாழ் மறைமாவட்ட இளையோரிடம் தேசிய கத்தோலிக்க இளையோர் சம்மேளனக் கொடி கையளிக்கப் பட்டது. படத்தில் யாழ் மறைமாவட்ட இயக்குனர் அ.ஸ்ரீபன் அடிகளாருடன் இளையோர் காணப்படுகின்றனர்.



## மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் 'ஆமென் – 4' இறுவட்டு வெளியீடு

மட்டக்களப்பு தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயத்தில் 01.12.2019 அன்று ஆலய பங்குத்தந்தையும், அருங்கொடை இயக்க இயக்குனருமான அருட்தந்தை.ப.ரமே' கிறிஸ்றி அடிகளாரால் 'ஆமென் – 4' என்றபெயரில் இறுவட்டு வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாநில ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்துகொண்டு வாழ்த்தைத் தெரிவித்தார். இறுதியில் தாண்டவன்வெளி பங்கு மேய்ப்புப்பணிச்சபையினர் அருட்தந்தை அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். இவ்விறுவட்டானது அடிகளாரால் வெளியிடப்படும் ஒன்பதாவது இறுவட்டாகும்.

# அடுத்த வருடம் எந்த மாதம் உங்களுக்கு மோசமானது?

**2020 இல் உங்க ராசிப்படி எந்த மாதம் உங்களுக்கு ஆபத்தான மாதமாக இருக்கப்போகிறது தெரியுமா?**

2019 முடிய இன்னும் சில வாரங்களே உள்ளது, அனைவரும் 2020 – ஐ எதிர்பார்த்து ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறோம். கடந்த வருடம்தான் சரியாக இல்லை. வரும் வருடமாவது நன்றாக இருக்குமா, அல்லது இந்த வருடம் போலவே அடுத்த வருடமும் நன்றாக இருக்குமா அல்லது அடுத்த வருடம் ஏதேனும் ஆபத்து ஏற்படுமா என்று ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு எதிர்பார்ப்பு உள்ளது.

2020க்கான பலன்கள் கணிக்கப்பட்டுவிட்டன, ஒவ்வொரு ராசிக்கும் அடுத்த வருடம் சில ஆச்சரியங்களையும், அதிர்ச்சிகளையும் வைத்து காத்திருக்கிறது. அடுத்த வருடம் முழுவதுமே எந்த ராசிக்கும் சாதகமாக இருக்கப்போவதில்லை, ஏனெனில் அனைவருக்குமே கலவையான பலன்கள்தான் காத்திருக்கின்றன. ஒவ்வொரு ராசிக்கும் ஒரு காலக்கட்டம் சோதனைகள் நிறைந்த காலமாக இருக்கும். அதன்படி இந்த பதிவில் உங்கள் ராசிக்கு அடுத்த வருடம் எந்த மாதம் மோசமான மாதமாக இருக்கும் என்று பார்க்கலாம்.



**மேஷம்**

கோடைகாலத்தின் உச்சமாக இருக்கும் இந்த காலம், சந்தேகத்திற்கு இடமின்றி மே ராசிக்காரர்களுக்கு இது சவாலான மாதமாக இருக்கும். இந்த மாதத்தில் புதனின் பின்னடைவு ஏற்படுவதால் பதற்றங்கள் அதிகரிக்கும், மேலும் மோதல்களும், சிக்கல்களும் உங்களின் வழியில் தேடி வரும்

**ரிஷபம்**

ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் ரிஷப ராசிக்காரர்களுக்கு சோதனைகள் நிறைந்த காலமாக இருக்கும். இந்த காலங்களில் இவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட நேரிடும். இந்த காலக்கட்டத்தில் உறவுகளை சமாளிப்பதில் இவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படும், மேலும் உறவுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவும். டிசம்பர் மாதத்தில் என்ன நடந்தாலும் அதனை எதிர்கொள்ள தயாராக இருங்கள்.





**மிதுனம்**

வெளிப்படையாக சொல்வதென்றால் காதல் மாதமான பிப்ரவரி மாதம் கடினமான மாதமாக இருக்கப்போகிறது. இந்த மாதத்தில் பல கிரகங்களின் குறுக்கீட்டால் நீங்கள் தவறான முடிவுகளை எடுக்க வாய்ப்புள்ளது. நீங்கள் ஏமாற்றப்படுவதற்கும், பிறரால் திசைதிருப்பப்படுவதற்கும் நிறைய வாய்ப்புள்ளது. எனவே யாரையும் எளிதில் நம்பிவிடாதீர்கள்.

**கடகம்**

கடக்க ராசிக்காரர்களுக்கு மார்ச் மாதத்தில் காதலில் பல பிரச்சினைகள் காத்திருக்கின்றன. ரிஷப ராசியில் இருக்கும் செவ்வாயாலும், மீன ராசியில் இருக்கும் புதனாலும் உங்கள் காதல் வாழ்வில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது மேலும் பிரச்சினைகளை அதிகரிக்கும். அடுத்த சில மாதங்களில் இந்த நிலை மாறிவிடும். எனவே அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்துவிடாதீர்கள்.



**சிம்மம்**

சிம்ம ராசிக்கு புதனால் ஜூலை மாதத்தில் பல பிரச்சினைகள் ஏற்படலாம், இந்த காலக்கட்டத்தில் உங்களின் மனஅழுத்தம் உங்களை அதிகம் அச்சுறுத்தும். உங்களின் பிறந்த மாதமே உங்களுக்கு சோதனைகள் நிறைந்த காலமாக இருக்கப்போகிறது. இந்த மாதத்தில் ஏற்படும் பிரச்சினைகள் உங்களுக்கு ஆண்டின் இறுதிவரைத் தாக்கத்தை ஏற்படுத்தும்.



**கன்னி**



கன்னி ராசிக்காரர்களுக்கு மார்ச் மாதம் சோதனைகள் நிறைந்த மாதமாக இருக்கும், இந்த மாதத்தில் அனைத்தும் தாமதமாகவும், சிரமமாகவும் நடக்கும். உங்களின் அதிகரித்த பதற்றம் வாழ்க்கையின் பிற பகுதிகளில் விபத்துக்களுக்கு வழி வகுக்கும் என்பதால் நீங்கள் மற்றவர்களை விட அதிகமாக போராடலாம், குறிப்பாக உறவுகளில் விரக்தி ஏற்படத் தொடங்கும். உங்களின் பொறுமையை மட்டும் இழந்துவிடாதீர்கள்.

**துலாம்**

இந்த ஆண்டின் இரண்டாவது மாதமான பெப்ரவரி மாதம் உங்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். உங்களின் வாழ்க்கையில் இந்த காலக்கட்டத்தில் சமநிலையின்மை இருக்கும், மேலும் உங்களைச் சுற்றி இருக்கும் குழப்பங்களில் இருந்து உங்களால் வெளியே வர முடியாது. உங்கள் மனதிற்குள் ஏற்படும் போராட்டங்களை உங்களால் சமாளிக்க முடியாது.



**விருச்சிகம்**

விருச்சிக ராசிக்காரர்களுக்கு செப்டம்பர் மாதம் மிகவும் மோசமான மாதமாகவும், சோதனைகள் நிறைந்த மாதமாகவும் இருக்கப்போகிறது. சரியான புரிதல் மற்றும் தொடர்பு இல்லாததால் ஏற்படும் பிரச்சினைகள் இவர்களின் மனநிலையை இந்த காலக்கட்டத்தில் வெகுவாக பாதிக்கும். உங்களின் அவசரமாக செயல்பாடுகள் கண்ணீருக்கு வழிவகுக்கும்.



**தனுசு**

ஏப்ரல் மாதம் தனுசு ராசிக்காரர்களுக்கு ஆபத்தான மாதமாக இருக்கப்போகிறது. இந்த ஆண்டின் தொடக்கம் உங்களுக்கு சிறப்பாக இருக்கும். ஆனால் வரும் காலங்களில் அந்த நிலை மாற வாய்ப்புள்ளது. குறிப்பாக நிதி மற்றும் உறவுகள் தொடர்பாக பல பிரச்சினைகள் ஏற்படலாம்.



**மகரம்**

ஜூன் மாதம் உங்களுக்கு மோசமான மாதமாக இருக்கப் போகிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இந்த மாதத்தில் உங்களின் கருத்துக்கள் மற்றவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட வாய்ப்புள்ளது. புதனின் தாக்கத்தால் மற்றவர்களிடம் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் மீது திணிக்காதீர்கள், உங்கள் முடிவுகளை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தவும் செய்யாதீர்கள்.



**கும்பம்**

கும்பராசிக்காரர்களுக்கு ஜுலை மாதம் காதலில் பல பிரச்சினைகளும், சோதனைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் கடந்த கால காதல் பிரச்சினைகள் இந்த மாதத்தில் மீண்டும் உயிர்பெறும், இதுவே உங்களின் நிகழ்கால பிரச்சினைகளுக்கு காரணமாக அமையலாம். உங்களின் தவறான அணுகுமுறையால் உங்கள் உறவு நிரந்தரமாக பிரிய வாய்ப்புள்ளது. உங்களின் தொடர்புகொள்ளும் முறையில் நிதானத்தை கடைபிடியுங்கள்.



**மீனம்**

மீனராசிக்காரர்களுக்கு ஒகஸ்ட் மாதம் ஆபத்து நிறைந்த மாதமாக இருக்கப்போகிறது. ஆண்டின் ஆரம்பகாலத்தில் இருந்தே சோதனைகள் நிறைந்த காலமாக தொடங்கி அது இந்த மாதத்தில் உச்சத்தை பெறும். உங்களின் எதிர்காலத்தை சிதைக்கும் பல செயல்களில் நீங்கள் இந்த மாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. தேவையில்லாத செலவுகளை இந்த மாதத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். ஆண்டின் இறுதி உங்களுக்கு வளமான காலமாக மாறும்.



# என்ன சொல்கிறார் அஸ்வின்?

இந்தியாவில் நடைபெறும் ரி - 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயார்படுத்தல்களை, ஒவ்வொரு அணிகளும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் தற்போது ஒவ்வொரு அணியும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலை விரிக்கின்றன.

இதற்கமைய இதுவரை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லாத கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, அண்மையில் அணிக்குள் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.

இதற்கமைய முதற்கட்டமாக இரண்டு வருட ஒப்பந்தத்தில் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட மைக் ஹசன், ஒப்பந்தம் முடிவதற்கு முன்னதாகவே தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதற்குப் பின்னர், அணியின் செயற்பாட்டு இயக்குநராக இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் அனில் கும்ப்ளே நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில், கடந்த இரு வருடங்களாக, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக செயற்பட்டு வந்த அஸ்வின், டெல்லி கெபிட்டல்ஸ் அணிக்கு மாறினார்.

இந்த நிலையில் அணி மாறியமை குறித்து அஸ்வின் முதல்முறையாக மனம் திறந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்–

இந்திய டெஸ்ட் அணியில் இடம் கிடைக்காமல் இருந்தபோது, ஏமாற்றமாக இருந்தது. உற்சாகத்தை இழந்ததால், போட்டியைத் தொலைக்கட்சியில் கூட பார்க்கவில்லை. தற்போது மீண்டும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி.

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி - 20 உலகக்கிண்ண தொடரில் விளையாடுவதே எனது இலக்கு.

ரி - 20 உலகக்கிண்ண தொடர் எல்லோருக்குமான லட்சியம். அதற்கான இந்திய அணியில் இடம்பெற யார் தான் விரும்ப மாட்டார்கள்? 2014ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் யுவராஜ் சிங் மீண்டும் இடம் பிடித்தார். பிறகு 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான அணியிலும் இடம்பெற்றார். இப்போது எனக்கு வயது 33 தான்.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடனான என்னுடைய அனுபவம் சிறப்பாக இருந்தது. அதில் கிடைத்த அனுபவங்கள் எனக்கு உதவியாக இருந்தன. அணித்தலைவர் பதவி கிடைத்ததால் புதிய பாதையில் பயணித்தேன். ஓரளவு என் பணியை நன்கு செய்தேன். ஆனால் அணி மாறுவது எதுவும் என் கையில் இல்லை.

நினைத்தபடி வெற்றிகளை அணிக்குத் தரவில்லை என அணி உரிமையாளர்கள் கருதினார்கள். அது உண்மைதான். இரண்டு வருடங்களிலும் என்னால் அணியை பிளே ஒவ்வுக்குத் தகுதி பெற வைக்க முடியவில்லை. அதற்கு நீங்கள் காரணங்கள் சொல்லலாம். ஆனால், ஆமாம் என்னால் அதைச் செய்ய முடியவில்லை என்று துணிச்சலுடன் நான் சொல்வேன்.

ஐ.பி.எல். தொடரை இளைஞர்களுக்கானது என்று சொன்னாலும் அனுபவ வீரர்களைக் கொண்ட அணிகள் ஐ.பி.எல் தொடரில் சாதித்துள்ளன. ரி - 20 உலகக் கிண்ண தொடரும் அப்படித்தான். அனுபவ வீரர்களைக் கொண்ட அணி கள் சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளன. கிறிஸ் கெயில், டேரன் சாமி, பொலார்ட் என அனுபவ வீரர்களைக் கொண்டிருந்த மேற்கிந்திய தீவுகள் ரி - 20 உலகக் கிண்ண தொடரை வென்றது' எனக் கூறினார்.

அஸ்வின் அணித்தலைவராகச் செயற்பட்ட 28 போட்டிகளில், பஞ்சாப் அணி, 12 வெற்றிகளையும், 16 தோல்விகளையும் பெற்றுள்ளது. கடந்த



வருடம் 7ஆவது இடத்தினையும், இந்த வருடம் 6ஆவது இடத்தையும் பிடித்தது.

இரண்டு வருடங்களிலும் கடைசிக் கட்டத்தில் படு மோசமாக விளையாடியதால் பிளே ஓவ் சுற்றுக்கு அந்த அணியால் தகுதி பெற முடியாமல் போனது.

இதனால் இந்த வருடம் புது அணி, புதிய பயிற்சியாளர்கள், புது அணித்தலைவருடன் களமிறங்க கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்கள் முடிவெடுத்துள்ளார்கள். இதன் அடிப்படையில் அஸ்வினை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, டெல்லி கபிட்டல்ஸ் அணிக்கு விட்டுக் கொடுத்தது.

பஞ்சாப் அணி, 2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தில் அஸ்வினை இந்திய மதிப்பில் 7.60 கோடி ரூபாய்க்கு வாங்கியது. தற்போது, அதே தொகைக்கு அஸ்வினை டெல்லி அணி வாங்கியுள்ளது.

இதுவரை 139 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடியுள்ள அஸ்வின், 125 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மேலும், 375 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய பளுதூக்கல் போட்டியில் வெள்ளி வென்ற யாழ். வீராங்கனை!

நேபாளத்தில் இடம்பெற்று வரும், 13 ஆவது, தெற்காசிய விளையாட்டு விழாவில் பங்கேற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயபாஸ்கர் ஆர்ஷிகா பளுதூக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். நேற்று முன் தினம் இடம்பெற்ற 64 கிலோ பளுதூக்கல் போட்டியின் போதே, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்ஷிகா வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இதேவேளை, தெற்காசிய விளையாட்டு விழா போட்டி வரலாற்றில் இலங்கை சார்பாக பளுதூக்கல் போட்டியில் பங்கேற்ற முதல் தமிழ் வீராங்கனையாக விஜயபாஸ்கர் ஆர்ஷிகா வரலாறு படைத்துள்ளார். தனது 13 ஆவது வயதில் பளுதூக்கல் விளையாட்டை ஆரம்பித்தார். இவருக்கு தந்தையே பயிற்றுநராகச் செயற்பட்டு வருகின்றார்.

2014ஆம் ஆண்டில் தனது 13ஆவது வயதில் பாடசாலை மட்ட பளுதூக்கல் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற ஆர்ஷிகா, அன்று முதல் பாடசாலை மட்ட சகல போட்டிகளிலும் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

கனிஷ்ட பிரிவில் 2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை 4 தங்கப்பதக்கங்களையும், சிரேஷ்ட பிரிவில் 3 வெள்ளி, 2 தங்கப்பதக்கங்களையும் ஆர்ஷிகா வென்றுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகள் மட்ட 20 வயதிற்குட்பட்ட மகளிருக்கான பளு தூக்கல் போட்டிகளில் மூன்று தேசிய சாதனைகளுடன் வெற்றியீட்டியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கையிலும் 2020 இல் ரி - 20 கிரிக்கெட் திருவிழா

இலங்கையில் கடந்த சில வருடங்களாக இழுத்தடிப்பு செய்யப்படும் ரி -20 கிரிக்கெட் திருவிழாவான 'லங்கன் பிரீமியர் லீக்' தொடரை அடுத்த ஆண்டு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தொடர் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய லங்கன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடர், நீண்டதொரு சர்ச்சைக்கு பின்னர் இந்த ஆண்டு நடத்த திட்டமிடப் பட்டிருந்தது.

ஆனால் அனுசரணை, வெளிநாட்டு வீரர்களின் தேர்வு எனப் பல்வேறு விடயங்களில் எழுந்த குழப்ப நிலையில், இத்தொடரை நடத்துவதில் சிக்கல் நிலை எழுந்தது. தற்போது இந் நிலைமைகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு அடுத்த ஆண்டு இத்தொடர் நடைபெறுமென இலங்கைக் கிரிக் கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த தொடரில் 5 அல்லது 6 அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், தொடரின் பணிப்பாளராக கடந்த வருடம் நியமிக்கப்பட்டிருந்த ரசல் ஆர்னல்ட் மீண்டும் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபை வருடாந்தம் நடாத்தும் உள்ளூர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில், அணிகள் குறைக்கப்பட்டு நடத்தப்படும் எனவும் ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலிய மண்ணில் தோற்றமை எங்களது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது!



ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரைத் தோற்றது தங்களது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது என பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் அசார் அலி தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்ற பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகளிலும் இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்தது.

சப்ராஸ் அஹமட்டின் அணித்தலைவர் பதவி நீக்கத்திற்கு பிறகு, பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அணியின் பொறுப்பை ஏற்றார் அசார் அலி.

இந்தப் பெரும் எதிர்பார்ப்புடன் சாதிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த படுதோல்வியானது அவர் மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இதற்கு பதிலளித்த அசார் அலி, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இரண்டு போட்டிகளிலும் நாங்கள் பெற்ற தோல்வியின் விதம் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. ஆஸ்திரேலியா மண்ணில் தோற்றது எங்களது கிரிக்கெட் பெருமையை புண்படுத்தியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ள கஷ்டமாக உள்ளது.

நாங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சரியான தயாரப்படுத்துதலுடனும், நேர்மறையான மனநிலையுடனும் தான் சென்றோம். இரண்டு போட்டிகளிலும் இன்னிங்ஸ் தோல்வி அடைந்தமை ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இதற்காக நான் சாக்குபோக்கு சொல்ல விரும்பவில்லை என கூறினார்.

# புத்துணர்வை வழங்கும் திபெத்திய யோகா முறை

தற்போதைய மன அழுத்தமமிக்க வாழ்க்கை முறையால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு உடல் மற்றும் மனதிற்கு சிறிது புத்துயிர் அளிக்க வேண்டும். புத்துணர்ச்சி என்ற வார்த்தையைக் கேட்கும் போது நம் மனதில் முதலில் நினைவிற்கு வருவது யோகா மற்றும் தியானமாகத் தான் இருக்கும். இந்த இரண்டுமே மூளையையும், உடலையும் சமநிலையில் வைத்திருக்க உதவுபவைகளாகும்.

பொதுவாக திபெத்தில் உடல் மற்றும் மனதிற்கு புத்துயிர் அளிக்க 5 திபெத்திய சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. திபெத்திய சடங்குகள் என்பது திபெத்திய லாமாக்களால் உருவாக்கப்பட்ட பழங்கால 5 யோகா பயிற்சிகளாகும். இந்த ஒவ்வொரு பயிற்சியையும் தினமும் 21 முறை ஒருவர் மேற்கொண்டு வந்தால், உடல் மற்றும் மனதிற்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும். இந்த யோகா பயிற்சிகள் உடலில் உள்ள ஏழு ஆற்றல் புள்ளிகளில் செயல்பட்டு, உயிர் மற்றும் வலிமையை மீட்டெடுக்கும். எனவே இது 'இளைஞர்களின் நீரூற்று' என்று அழைக்கப்படுகிறது. னிநுறீவீ யூசிபும்: 40 வயதிற்கு மேல் கட்டாயம் செய்யக்கூடாத உடற்பயிற்சிகள்! இப்போது புத்துணர்ச்சி அளிக்கும் 5 திபெத்திய சடங்கு கள்/யோகா பயிற்சிகளைக் காண்போம். அதைப் படித்து தெரிந்து அன்றாடம் ஒவ்வொரு பயிற்சியையும் 21 முறை செய்து பயன் பெறுங்கள்.

திபெத்திய யோகா பயிற்சிகளை செய்வதால் கிடைக்கும் நன்மைகள்:-

மூட்டு வலியில் இருந்து நிவாரணம் கிடைக்கும். உடல் வலிமை மேம்படும் இரத்த ஓட்டம் சீராகும். மன இறுக்கம் குறையும். ஆழ்ந்த தூக்கம் கிடைக்கும். ஆற் றல் மேம்படும். இளமைத் தோற்றம் தக்க வைக்கப்படும்.

### எப்படி ஆரம்பிப்பது?

திபெத்திய யோகா பயிற்சியின் ஆரம்ப காலத்தில், அதாவது முதல் வாரம் தினமும் ஒவ்வொரு பயிற்சியையும் மூன்று முறை செய்ய வேண்டும். அடுத்த வாரத்தில் 2 முறையை அதிகரித்து ஒவ்வொரு பயிற்சியையும் ஐந்து முறை செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொரு வாரமும் 2 முறைகளை அதிகரித்து, 21 சுற்றுகள் செய்யும் வரை அதிகரிக்க வேண்டும்.

### முதல் பயிற்சி

இந்த திபெத்திய யோகா பயிற்சி தசைகளின் வளர்ச்சிக்கும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த




வும் செய்யப்படுவதாகும். இப்போது அதை எப்படி செய்வதென்று காண்போம். முதலில் நேராக நின்று, படத்தில் காட்டப்பட்டவாறு கைகளை பக்கவாட்டில் நீட்டிக் கொள்ள வேண்டும். உள்ளங்கை தரையைப் பார்த்தவாறு இருக்க வேண்டும். பின் அதே இடத்தில் நின்று கொண்டே கடிகார சுழற்சியில் சுற்ற வேண்டும். இப்படி சுற்றும் போது தலையைக் குனியாமல், கண்களைத் திறந்து கொண்டு சுற்ற வேண்டும். இப்படி 21 முறை சுற்ற வேண்டும்

### இரண்டாம் பயிற்சி

இரண்டாம் பயிற்சியில் சுவாசிக்கும் முறை




மிகவும் முக்கியம். இந்த பயிற்சி மேற்கொள்வ



தற்கு யோகா சகபாடி தேவை. இந்த பயிற்சிக்கு தரையில் நேராக, கைகளை பக்கவாட்டில் வைத்துக் கொண்டு படுக்க வேண்டும். பின் மூச்சை உள்ளிழுத்தவாறு தலையை உயர்த்தி, தாடையால் மார்பு பகுதியைத் தொட முயற்சிக்க வேண்டும். அதே சமயம், இரு கால்களையும் நேராக மேலே உயர்த்த வேண்டும். அதன் பின் மெதுவாக மூச்சை வெளியே விட்டு, தலை மற்றும் கால்களை பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும். இப்படி 21 முறை இந்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்

### மூன்றாம் பயிற்சி

இந்த பயிற்சி இரண்டாம் பயிற்சியைப் போன்று முக்கியமான சுவாச முறையைக் கொண்டது. இந்த பயிற்சியை செய்யும் போது கண்களை மூடிக் கொள்ள வேண்டும். இதனால் பயிற்சி



யில் முழு கவனத்தையும் செலுத்த முடியும். தரையில் முழங்கால் இட்டு, நேராக நிற்க வேண்டும். பின் உள்ளங்கைகளை தொடை யின் பின்புறம் வைத்துக் கொள்ள வேண்டும். பின் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு, தலையை பின்புறம் சாய்த்தவாறு, படத்தில் காட்டியவாறு பின்னோக்கி வளைய வேண்டும். பின்பு மூச்சை வெளியே விட்டவாறு பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். இப்படி 21 முறை செய்ய வேண்டும்.

### நான்காம் பயிற்சி

நான்காம் பயிற்சியை நகரும்



டேபிள்டொப் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பயிற்சியின் போதும் சுவாசிப்பதில் கவனம் மிகவும் அவசியம். இந்த பயிற்சிக்கு முதலில் தரையில் கால்களை நீட்டி அமர்ந்து, கைகளை பக்கவாட்டில் உடலை ஒட்டியவாறு தோள்பட்டைக்கு நேராக தரையில் வைக்க வேண்டும். பின் தலையைக் குனிந்து, மூச்சை உள்ளிழுத்தவாறு, படத்தில் காட்டப்பட்டவாறு கால்களை மடக்கி உள்ளங்கால்களை தரையில் பதித்து, உடலை மேல் நோக்கி டேபிள் டொப் போன்ற நிலையில் சிறிது நேரம் இருக்க வேண்டும். பின்பு மூச்சை வெளியே விட்டுக் கொண்டே, பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். இப்படி 21 முறை தினமும் செய்ய வேண்டும்.

### ஐந்தாம் பயிற்சி

இந்த பயிற்சிக்கு தரையில் குப்புறப் படுத்து, கைகளை தோள்பட்டைக்கு நேராக வைத்து, மூச்சை வெளியே விட்டுக் கொண்டே, கால் விரல்களால் உடலைத் தாங்கிப் பிடித்து,




தலையை பின்னோக்கி வளைக்க வேண்டும். பின் மூச்சை உள்ளிழுத்து, படத்தில் காட்டியவாறு ஷா வடி வில் உடலை வைக்க வேண்டும். இப்படி 21முறை இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

### பாதுகாப்பு டிப்ஸ்

மற்ற உடற்பயிற்சிகளைப் போன்றே, திபெத்திய யோகா பயிற்சிகளையும் கவனமாக மேற்கொள்ள வேண்டும். ஆரம்ப காலத்தில் குறைவான எண்ணிக்கையில் ஆரம்பித்து, பின் மெதுவாக எண்ணிக்கைகளை அதிகரிக்க வேண்டும்.

### எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள்

இதயம் மற்றும் சுவாச பிரச்சனைகளைக் கொண்டார்கள், திபெத்திய பயிற்சிகளை மேற்கொள்ளும் முன், பாதுகாப்பிற்காக மருத்துவரிடம் ஒரு வார்த்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நரம்பியல் பிரச்சினைகளான பார்கின்சர் நோய் அல்லது மல்டிப்பிள் ஸ்கிளிரோசிஸ் போன்ற பிரச்சினைகளால் அவஸ்தைப்படுபவர்கள், கட்டாயம் மருத்துவரிடம் கேட்டு, பின்பு பின்பற்ற வேண்டும். அடிக்கடி தலைச்சுற்றல் பிரச்சினையை சந்திப்பவர்கள், முதல் பயிற்சியை மேற்கொள்



ளும் முன் மருத்துவரிடம் கலந்தாலோசித்துக் கொள்ள வேண்டும்.

கர்ப்பிணிகள் கர்ப்ப காலத் தில் திபெத்திய பயிற்சிகளை மேற்கொள்ளாமல் இருப்பதே பாதுகாப்பானது. சமீபத்தில் அறுவை சிகிச்சையை மேற்கொண்டவர்கள், இந்த பயிற்சியை மேற்கொள்ளக்கூடாது. குறிப்பாக 6 மாத காலத்திற்கு எந்த ஒரு உடற்பயிற்சியையும் மேற்கொள்ளக்கூடாது

# சஜித்துக்கு எதிராக ரணில் சதிச் செயல்?

## ஐ.தே.கவுக்குள் குழப்ப நிலை

கொழும்பு, டிசெ. 08

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானத்தை எடுத்தாலும் அதிலும் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளமை குறித்து சஜித் ஆதரவு எம்.பிக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அரசமைப்புச் சபை சபாநாயகரின் தலைமையில் எதிர்வரும் 12 ஆம் திகதி கூடவுள்ள நிலையில் அதில் பங்கேற்க சஜித்துக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட பின்னரே நாடாளுமன்றச் சபை விவகாரங்கள் தொடர்பில் சஜித்துக்கு அழைப்பு விடுக்கப்படலாமெனத் தெரிகிறது.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடி ஜனாதிபதியின் அக்கிராசன உரைக்கு இடமளிக்குமெனவும் அதன் பின்னர் பிற்பகல் 1 மணிக்குச் சபை கூடும்போது சஜித் எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்படுவாரெனவும் முன்னதாகச் சபாநாயகர் அறிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் அக்கிராசன உரைக்குப் பின்னர் நாடாளுமன்றம் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டால் எதிர்க்கட்சித் தலைவர் நியமனத்தை நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுமென சஜித் ஆதரவு எம்.பிக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் ஒரு சிலரால் செய்யப்பட்ட மறைமுக ஏற்பாடாக இருக்கலாமெனவும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



இது ஒருபுறமிருக்க நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது நாடாளுமன்றத்தில் தமக்குள்ள பெரும்பான்மை ஆதரவைக் காண்பித்து பிரதமர் பதவியைத் தருமாறு கோரிக்கை விடுக்க சஜித் ஆதரவு எம்.பிக்கள் சிலர் யோசனை தெரிவித்துள்ளனர்.

ஆனால், இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அந்த யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் ஆதரவை வழங்குமா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் வெளிநாடு சென்று மீண்டும் ஜனவரி 2 ஆம் திகதியே நாடு திரும்புவாரெனச் சொல்லப்படுகிறது.

இதனால் கட்சி விவகாரங்கள் தொடர்பான உறுதியான தீர்மானங்கள் எதுவும் அதுவரை எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)

### திருத்தம்

நேற்றைய 'காலைக்கதிர்' நாளிதழில் இரண்டு சிறிய தவறுகள் இடம்பெற்றுள்ளன.

1) வடக்கு சுகாதார ஊழியர்கள் தொடர்பாக 11 ஆம் பக்கத்தில் பிரசுரமான செய்தியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெய்வேந்திரனின் படத்துக்குப் பதிலாக மன்னார் அரச அதிபர் மோகன்ராஸின் படம் பிரசுரமாகியுள்ளது.

2) முல்லைத்தீவு அடைமழை பற்றிய 12ஆம் பக்கச் செய்தியில் உடைப்பெடுத்த பாலத்தின் படத்துக்குப் பதிலாக பிறிதொரு பாதிப்புற்ற பாலத்தின் படம் பிரசுரமாகியுள்ளது.

தவறுக்கு வருந்துகிறோம். ஆசிரியர்

# ரணில் விலகி சஜித்தை தலைவராக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் கோரிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுப்புச் செய்து சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியமையையிட்டு நாங்கள் அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியையும் அவர் விட்டுக்கொடுப்பு செய்து சஜித்துக்கு வழங்கவேண்டும்.

– இவ்வாறு கூறியுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன். தலவாக்கலை பிரதேசத்தில் வைத்து நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியையும் ரணில் விக்கிரமசிங்க விட்டுக் கொடுப்பு செய்து சஜித் பிரேமதாஸவுக்கு கொடுத்து செயற்படவேண்டும்..

கடந்த 25 வருட காலங்கள் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கட்சியை வழிநடத்தி வந்தாலும், இந்தக் கட்சியின் முன்னேற்றகரமான செயல்களைச் செய்வதற்கு தவறி இருந்தார் என்பது தான் உண்மையான கருத்து. ஏனென்றால் ஒவ்வொரு தேர்தல்களிலும் பின்னடைவைச் சந்திக்க கூடிய நிலையிலேயே கட்சி இருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது – என்றார்.

# ராஜிதவிடம் விசாரணை மேற்கொள்ளவேண்டும்

## மஹிந்த அமரவீர கோரிக்கை



கொழும்பு, டிசெ. 08

இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து தூதரகத்தின் பெண் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ராஜித தான் அறிந்து வைத்திருக்கிறார் எனத் தெரிவித்துள்ள அவர், இந்தச் சம்பவம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டுமென மேற்கொள்ளப்பட்ட நாடகமெனவும் விமர்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுவிற்சர்லாந்து தூதரக அதிகாரி போலியான தகவல்களை வெளியிட்டிருந்தால் அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார். (ஐ)

# மட்டக்களப்பில் 35,756 பேர் வெள்ள இடரினால் பாதிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 08

சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 10,738 குடும்பங்களைச் சேர்ந்த 35,756 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாதிக்கப்பட்ட மக்களுக்காக இதுவரை சுமார் 7 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா சமைத்த உணவுகள் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கான உலர் உணவு பொருள்கள் வழங்குவதற்காக 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் மழையினால் ஒரு வீடு முழுமையாகச் சேதம் அடைந்துள்ளது. 42 வீடுகள் பகுதியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

வெள்ளப்பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக 1 கோடி 60 லட்சம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் கோரியுள்ளோம். இந்த நிதி கிடைக்கப் பெற்றதும் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வெள்ளபாதிப்பால் முருத்தானை, பிரம்படித்தீவு, சாராவெளி, முறுக்கந்தீவு, அக்குறானை, நாசியந்தீவு, புலாக்காடு, வடமுனை, ஊத்துசேனை, கட்டுமுறிவு, மதுரங்கேணி குளம், பெண்டுகள்சேனை ஆகிய கிராமங்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் இயந்திரப்படகுகள் மூலம் உணவுப் பொருள்களும், ஏனைய அடிப்படை பொருட்களும் மக்களுக்குக் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

மாவட்டத்தில் 11 இடங்களில் மக்கள் போக்குவரத்துக்கான பாதைகள் தடைப்பட்டுள்ளன. அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் உழவு இயந்திரங்கள், இயந்திரப்படகுகள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

# மைத்திரிக்கு சீனத் தூதுவர் வாழ்த்து

*கொழும்பு, டிசெ. 08*

*இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் க்ஷுஆன் நேற்று முன் தினம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.*

*முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்கால அரசியல் பயணத்துக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ஐ)*



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனைப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka. Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com